காந்தி அடிகளும்
கம்பநாட்டாழ்வாரும்

காந்தி அடிகளும் கம்பநாட்டாழ்வாரும்

நாமக்கல் கவிஞர்

கவிஞர் பதிப்பகம்

363, ராஜவீதி, கோயமுத்தூர்-1

முதற் பதிப்பு ; ஜனவரி 1964

விலை ரூ. 1-50

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ், சென்னை-2.

பதிப்புரை

நாமக்கல் கவிஞர் அவர்கள் இளமையிலிருந்தே கம்பராமாயணத்தில் மிகவும் ஈடுபட்டு, கம்பன் மேதையை சொற்பொழிவாற்றி வந்தவர்கள்,

பின்னர் காந்திமகானிடம் ஈடுபட்டு அவருடைய கொள்கைகளை பாடல்களாக்கி பரப்பி வந்தபோது, காந்தீயத்தைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமேயே கம்பன் தன் காவியத்தில் புகுத்தியுள்ளதைக் கண்டார்கள்.

அதனை ஒரு நூலாக்கி இப்போது தந்துள்ளார்கள். கம்பனிடத்தும் காந்திமகானிடமும் பக்தி பூண்டவர்கள் இதனைப் படித்து மகிழ்வர் என்பது திண்ணம்.

—பதிப்பகத்தார்

காந்தி அடிகளும் கம்பநாட்டாழ்வாரும்

அத்தியாயம் 1

'காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும்' என்ற தலைப்பைப் பார்க்கும்போதே உங்களுக்கு வியப்பும் திகைப்பும் உண்டாகிறதல்லவா?

மகாத்மா காந்திக்கும் கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வாருக்கும் என்ன சம்பந்தம்? பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பனுக்கும், இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த காந்தியடிகளுக்கும் என்ன தொடர்பு? ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த கம்பநாட்டாழ்வாருக்கும், பதினாறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த காந்தியடிகளுக்கும் என்ன பிணைப்பு இருக்க முடியும் என்றெல்லாம் எண்ணிப் பதறச் செய்கிறதல்லவா?

ஆனாலும் தயவுசெய்து சற்றே பொறுங்கள்.

இங்கே சொல்லப்புகுந்த விஷயம் - ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டில் பிறந்த கம்பநாட்டாழ்வார், நூற்றுமூன்று ஆண்டுகளுக்கு முன்னால் வடநாட்டில் குஜராத்தில் பிறந்த காந்தியடிகளைச் சந்தித்தார் என்றோ அவருடன் பேசினாரென்றோ அல்லது வேறு தொடர்பு கொண்டாரென்றோ சொல்ல வந்தது அல்ல!

பின் என்னவென்றால் கவிச்சக்ரவர்த்தி கம்பநாட்டாழ்வார், அவருடைய அற்புதக் காவியமாகிய கம்பராமாயணத்தில் மகாத்மா காந்தியையே நமக்குக் காட்டுகின்றார். மகாத்மா காந்தியையே காட்டுகின்றார் என்றால், போர்பந்தர் சமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து, பாரிஸ்டராகித் தென்னாப்பிரிக்காவில் சாத்வீகச் சட்டமறுப்பு நடத்திப் பின் தம்முடைய தாய்நாட்டில் சத்தியாக்ருகம் நடத்தி நமக்குச் சுதந்திரம் தேடிக்கொடுத்த மோகனதாஸ் கரம்சந்த் காந்தியின் உடலுருவத்தைக் காட்டுகிறார் என்பதல்ல.

மற்று எதைக் காட்டுகிறார் என்றால், மகாத்மா மோகனதாஸ் கரம்சந்த் காந்திக்கே உரிய ஒரு தனிச் சிறப்பான தத்துவத்தைக் காட்டிக் காந்தியடிகளை நமக்கு நினைப்பூட்டுகின்றார். ஆம், மகாத்மா காந்தி, இந்த உலகத்தில் தோன்றிய வேறு எந்த மகானும் சொல்லாத செய்யாத ஒரு தனி முறையைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவர்!

இந்த உலகத்தில் மனித சமுதாயத்துக்கு நல்வழி காட்டப் பாடுபட்ட மகான்கள் பலராவர். சிறப்பாக நம் இந்திய நாட்டில் சரித்திரத்துக்கு எட்டாத காலந்தொட்டு எத்தனையோ ஞானிகளும் யோகிகளும் தோன்றி ஆன்ம உணர்ச்சியையும் அறநெறிகளையும் மக்களுக்கு ஊட்ட அரும்பாடுபட்டிருக்கிறார்கள்.

வாழையடி வாழையாக இந்நாட்டில் உதித்த ஞானிகளுள் ஞானியாகவும், யோகியருள் யோகியாகவும் விளங்கியவர் மகாத்மா காந்தி. அவர் நம் முன்னோர்கள் ஆய்ந்து உணர்ந்து அறிவித்த பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம் என்ற நான்கு வகை யோகங்களையும் சாதித்தவர். அவர் தம்மைப் படைத்த கடவுளை ஒரு கணநேரம்கூட மறந்ததில்லை. தெய்வத்துக்குப் பிரார்த்தனை செலுத்தாமல் ஒரு செயலும் செய்ததில்லை. தம்முடைய செயல்களை ஆரம்பிப்பதற்குக் 'கடவுள் இன்னும் எனக்கு

வழிகாட்டவில்லை' என்றும் 'எனக்கு உள் ஒளி இன்னும் தோன்றவில்லை' என்றும் அடிக்கடி சொல்லிச் சதாகாலமும் தெய்வ சிந்தனையாகவே வாழ்ந்தவர். அதனால் அவர் பக்தி யோகி! அவர் செய்த சகல காரியங்களும் தன்னலங் கருதாத நிஷ்காமியம் ஆனதால், அவர் கர்மயோகி! அவருடைய எந்தப் பேச்சிலும் எந்த எழுத்திலும் மெய்ஞ் ஞானமே மிளிர்ந்ததால், அவர் ஞான யோகி! அவர் புலன்களை வென்று உடலை தன்வயப்படுத்தி அடக்கி ஆண்டதால் அவர் ராஜயோகி! மேலும் சத்தியத்தையும், சாந்தத்தையும், சன்மார்க்கத்தையும் விடாப்பிடியாகக் கொண்டு செயலாற்றியவராதலால் அவரை ஹடயோகி என்றும் சொல்லலாம்.

பெரும்பாலும், யோகிகளும் ஞானிகளும் தனித்திருந்து ஆன்ம சிந்தனையே செய்துகொண்டு, முக்தி அல்லது மோட்சம் என்று சொல்லப்படுகிற பேரின்ப நிலையைப் பெறுவதையே நாடினவர்கள். மக்களுடன் கலந்து வாழ்ந்துப் பிறருடைய துன்பம் துடைக்கவும் சமுதாயத்திலுள்ள அநீதிகளை அகற்றவும் பாடுபட்ட ஞானிகள் வெகு சிலர்.

அந்தச் சிலருக்குள் மகாத்மா காந்தி முதன்மையானவர் என்றல் மிகையன்று!

சொல்லாலோ, எழுத்தாலோ, செயலாலோ துளிகூட யாரையும் புண்படுத்தாமல், சத்திய சாந்த சன்மார்க்கத்தில் எள்ளளவும் பிசகாமல் நிராயுதபாணியாகத் தனிமனிதனாக மகத்தான ஆயுத பலம் கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்றுத் தம்முடைய பரிசுத்தமான ஒழுக்கத்தாலும் தியாகத்தாலும் எதிரிகளுக்கு மனமாற்றம் உண்டாகச் செய்து வெற்றி கண்ட பெருமை உலக—சரித்திரத்தில் மகாத்மா காந்தி ஒருவருக்கே உண்டு!

அவர் நடத்திய சாத்வீகப் போரில் அவர் கடைப்பிடித்த கொள்கைகள்தாம் அவருடைய தனிச் சிறப்புக்குக் காரணம். அந்தக் கொள்கைகள் என்னவெனில் :

உலகப் பொதுமறை என்று போற்றப்படுகிற திருக்குறளில் உள்ள,

1. ‘ ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று’

என்ற குறளும்,

2. ‘ தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை’

என்ற குறளும் எந்தக் கொள்கைகளைப் போதிக்கின்றனவோ அவைதாம் மகாத்மா காந்தி கடைப்பிடித்து அவற்றினின்றும் வழுவாமல் வாழ்ந்து காட்டிய கொள்கைகள்.

முதல் குறளின் பொருள் : ஒப்பற்றதாகத் தலைசிறந்த நல்லறிவு மனிதருக்கு எதுவென்றால், பிற உயிரைக் கொல்லாதிருப்பது. அதற்கு அடுத்தபடியாகச் சிறந்த நல்லறிவு எதுவென்றால் பொய் சொல்லாமை-என்பது.

இந்தக் ‘கொல்லாமை’ ‘பொய்யாமை’ என்ற இரண்டையும் தான் மகாத்மா காந்தி ‘அஹிம்சை’, ‘சத்தியம்’ என்று வடமொழிப் பதங்களாலும் ‘Nonviolence’, ‘Truth’ என்ற ஆங்கிலப் பதங்களாலும் பேசியும் எழுதியும் வந்தார்.

இரண்டாவது குறளின் பொருள் : தன்னுடைய உயிரை இழந்துவிட நேர்ந்தாலும் தான் பிறிதொரு உயிரைப் போக்கும் செயலைச் செய்யக்கூடாது-என்பது.

இது வெறும் ‘கொல்லாமை’ என்ற கொள்கையைவிட மிக உயர்ந்ததும் மிகவும் கடினமானதுமான கொள்கை.

‘உன்னைக் கொல்ல வருவது பசுவானாலும் நீ அதைக் கொல்லத்தான் வேண்டும்’ என்ற கருத்தே நியாயமானதாக நிலவுகின்ற உலகத்தில் ‘உன்னைக் கொல்ல வருகிறவனையும்கூட நீ கொல்லக்கூடாது’ என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் மிகமிக அரியர். அப்படிப்

பட்டவர்கள் புராணக் கதைகளில் காணப்படலாம். ஆனால் சரித்திரம் கண்ணாரக் கண்ட உத்தமர்களில் மகாத்மா காந்தி ஒருவர்தான் தன்னைக் கொல்லுகின்றவனுக்கும் தீங்கு செய்யக் கூடாது என்ற கொள்கையே குறிக்கோளாக வாழ்ந்தவர். அந்தக் குறிக்கோளை, அவர் நடத்திவந்த ‘யங் இந்தியா’ (Young India) என்னும் பத்திரிகையில் அவருடைய கையொப்பமிட்ட ஒரு கட்டுரையில் அஹிம்சா தத்துவத்தை எப்படிச் செயலில் காட்டத் தாம் விரும்புகிறார் என்பதை மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார்.

அந்தக் கட்டுரை ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. அந்தக் கட்டுரையை அப்படியே மொழிபெயர்த்து அதிலுள்ள கருத்துகள் சிறிதளவும்கூடச் சிதையாதபடி இயற்றப் பட்ட கவிதை :

குத்தீட்டி ஒருபுறத்தில் குத்தவேண்டும்
கோடாரி மறுபுறத்தைப் பிளக்கவேண்டும்
ரத்தவரத் தடியடியால் ரணமுண்டாக்கி
நாற்புறமும் பலர்உதைத்து நலியத்திட்ட
அத்தனையும் நான்சகித்து அஹிம்சைகாத்து
அனைவரையும் அதைப்போல நடக்கச் சொல்லி
ஒத்துமுகம் மலர்ந்து உதட்டில் சிரிப்போடு
உயிர்துறந்தால் அதுவே என் உயர்ந்த ஆசை.

என்பது. ‘என்னை ஒரு பக்கத்தில் குத்திட்டியால் ஒருவன் குத்தவேண்டும். இன்னொரு பக்கத்தில் ஒருவன் கோடாரியால் என்னைப் பிளக்க வேண்டும். வேறொரு புறத்தில் தடியால் அடித்து ரத்தம் வரும்படியான ரணம் உண்டாக்க வேண்டும். அத்துடன் நாற்புறத்திலும் பலர் என்னை எட்டியெட்டி உதைத்துக் கடுஞ்சொற்களால் திட்டி வசை கூற வேண்டும். இத்தனையும் சகித்துக்கொண்டு என்னை வெட்டுகிறவருக்கோ, குத்துகிறவருக்கோ உதைப்பவ

ருக்கோ, திட்டுகிறவருக்கோ, அடிப்பவருக்கோ ஒரு தீங்கும் செய்யாமல் அஹிம்சா தர்மத்தைக் காத்து என்னைப் போலவே எல்லா மக்களும் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு உதட்டில் புன்சிரிப்போடு மனமொப்பி உயிர்விட வேண்டும். அதுதான் என்னுடைய உயர்ந்த லட்சியம்.'

இது காந்தியடிகள் வெளியிட்ட விருப்பம்! இது

''தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறி
தின்னுயிர் நீக்கும் வினை''

என்ற குறளில் உள்ள கருத்தையும் கடந்த மிகவும் அசாத்தியம் என்று எண்ணத்தக்க லட்சியம். இப்படிப்பட்ட விருப்பத்தை மகாத்மா காந்தியைத் தவிர வேறு எந்த மனிதனும் வெளியிட்டதில்லை.

அவர் வெளியிட்ட விருப்பத்தின்படி ஈட்டியின் குத்தையும் கோடாரியின் பிளத்தலையும், தடியடியையும், உதைகளையும் வசை மொழிகளையும் ஏககாலத்தில் பொறுத்துக்கொண்டுத் திருப்பி எவருக்கும் எந்தத் தீங்கும் எண்ணாமல் மனமொத்தப் புன்முறுவலோடு உயிரைவிட அவருக்கு வாய்ப்பு நேரவில்லை. என்றாலும் அவர் தம் மீது வெடிகுண்டு வீசியவனையும் மன்னித்துவிடச் சொன்னதும் கொலைக்காரன் கோட்சே என்பவன் அவர் மீது மூன்று குண்டுகள் பாய்ச்சியபோது கடுகளவேனும் துன்ப உணர்ச்சி காட்டாமல் அமைதியாக ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டே உயிரைவிட்ட அதி அற்புதச் செயலும் அவர் 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளியிட்ட விருப்பம் எவ்வளவு உண்மையானதும் அந்தரங்க சுத்தியோடு கூடியதாகவும் இருக்கிறதென்பதை நிரூபிக்கின்றன.

எனவே திருவள்ளுவர் உபதேசித்த

'ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று'

'தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை'

என்ற இரண்டு குறள்களிலும் உள்ள போதனைகளை வாழ்க்கையில் நடத்திக் காட்டி மெய்ப்பித்தவர் காந்தி அடிகளே.

திருக்குறளை மேற்கோள் காட்டி இந்தக் குறள்களில் உள்ள கருத்தின்படி மகாத்மா காந்தி வாழ்ந்து காட்டினார் என்று சொல்லும்போது ஒரு கேள்வி பிறக்கின்றது. அந்தக் கேள்வி என்னவென்றால் 'திருக்குறளைப் படித்தறிந்தா காந்தியடிகள் இந்த மேலான கொள்கைகளை மேற்கொண்டார்?' என்பதே.

இந்தக் கேள்விக்கு விடை 'இல்லை' மகாத்மா காந்தி திருக்குறளைப் படித்து இந்தக் கொள்கைகளை மேற்கொண்டவரல்லர்' என்பதுதான். மகாத்மா இந்தக் கொள்கைகளைக் கடைப்பிடித்துக் காரியங்களில் இறங்கிய காலத்தில் அவருக்குத் தமிழ் மொழியைப்பற்றி ஒன்றும் தெரியாது. தென்னாப்பிரிக்காவில் அவர் வெள்ளையரை எதிர்த்து சத்தியாக்ருகம் நடத்தியபோது அவருடன் மிகவும் விசுவாசத்தோடு ஒத்துழைத்தவர்கள் தென்னாப்பிரிக்காவில் இருந்தத் தமிழர்கள். அதனால் அவர் தமிழர்களிடத்தில் தனிப்பற்று கொண்டவரானார். அதனால் பிற்காலத்தில் தமிழ் மொழியைக் கற்க ஆசைகொண்டு ஓரளவு கற்றுக் கொண்டார். தமிழை நிதானமாகப் படிக்கவும் எழுதவும் அவருக்குத் தெரியும். தமிழில் கையெழுத்தும் போடுவார். அவ்வளவுதான் அவருடைய தமிழ்ப்படிப்பு. பிற்காலத்தில் திருக்குறளையும் படித்துப் போற்றியிருக்கிறார். எதற்காகத் திருக்குறளைப் போற்றினார் என்றால், அவர் ஏற்கனவே மேற்கொண்டுச் செயலாற்றி வந்த சத்தியம், அஹிம்சை, தெய்வநம்பிக்கை முதலான ஆன்மஞானப் பண்புகள் தமிழ் மொழியில் பொதிந்து கிடப்பதைக் கண்டுதான்

காந்தியடிகள் கல்வி பெற்றது அவருடைய தாய்மொழியாகிய குஜராத்தியிலும் ஆங்கிலத்திலும் தான். அவர் ஆன்மஞானம் கண்டது வடமொழி வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சாஸ்திரங்கள், கீதை முதலான இலக்கியங்களிலிருந்துதான். திருக்குறளில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்லப்பட்டுள்ள தெய்வ நம்பிக்கை, கொல்லாமை, பொய்யாமை முதலிய அறிவுகள் வடமொழி நூல்களில் விரவியிருக்கின்றன. சத்தியப் பற்றும் அஹிம்சையுமே மேலான நல்லறிவு என்பதையும், ஆயுத பலத்தைக் காட்டிலும் ஆன்ம பலமே சிறந்ததென்பதையும் காந்தியடிகள் வடமொழி நூல்களின் ஆராய்ச்சியினால் அறிந்துகொண்டவை தாம். மேலே காட்டிய இரண்டு குறள்களிலும் அடங்கியுள்ள கருத்துக்கள் வட மொழியிலும் உள்ளவைகளே.

அப்படியானால் மேலே காட்டிய குறள்களிலுள்ள கருத்துகள் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தவைதாமா என்ற கேள்வி எழலாம்.

ஏனென்றால் வடமொழி ஆர்வமுள்ளவர்கள் "தமிழில் உள்ள எல்லா அறிவும் வடமொழியிலிருந்து வந்தவைதாம்" என்று வாதாடலாம்.

அதேபோலத் தமிழார்வம் உள்ளவர்கள் "வடமொழியிலிருந்து எந்த அறிவும் தமிழுக்கு வரவில்லை. வடமொழிக்கும் அறிவுண்டாக்கியது தமிழ்தான். எப்படியெனில் ஆதிகாலத்தில் வடநாடு முழுவதிலும் தமிழர்கள் தாம் வாழ்ந்தார்கள், அங்கே தமிழ்தான் மொழியாக இருந்தது என்ற உண்மை. ஆராய்ச்சியால் அறியக்கிடக்கிறது. வடநாட்டில் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தமிழர்கள் வெகு நாகரீகமுள்ளவர்களாக வாழ்ந்தபோதுதான் ஆரியர்கள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து அங்கே குடியேறினார்கள். தமிழர்களோடு பழகித் தமிழறிவை அடைந்தபின் அதைக்

கொண்டுதான் ஆரிய மொழியாகிய சம்ஸ்கிருதத்தை உண்டாக்கினார்கள் என்பது ஆராய்ச்சிக்காரர்கள் தீர்ப்பு" என்று எதிர்வாதம் செய்யலாம்.

இந்த இரண்டு வாதங்களிலும் ஓரளவு உண்மை இருக்கலாம். ஆனால் ஏக காலத்தில் இரண்டும் முழு உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் ஒன்று உண்மையானால் மற்றொன்று உடனே பொய்யாகி விடுகிறது.

முதல் வாதமாகிய 'தமிழில் உள்ள எல்லா அறிவும் வடமொழியிலிருந்து வந்தவைதாம்' என்பதைப் பார்ப்போம்; இது சரியானதல்ல. பல நல்ல கருத்துக்கள் வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் தமிழில் உள்ள எல்லா அறிவும் வடமொழியிலிருந்து வந்தவைதாம் என்பது உண்மையல்ல. அதை நிரூபிக்கத் திருக்குறள் ஒன்றே போதும். மனித சமுதாயம் இன்புற்றிருக்கவும், தனி மனிதன் அறநெறியைக் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்தவும் நல்லறிவு சொல்லுகின்ற வடமொழி நூல்களையும் திருக்குறளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வடமொழியில் எது நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதையே திருக்குறள் நல்லதல்ல என்று சொல்லுகிறது. ஒரே விஷயத்தைப் பற்றி இரு மொழிகளிலும் முற்றிலும் மாறுபட்ட வெவ்வேறு அறிவுகளைச் சொல்லுகின்றன. பல விஷயங்களில் இந்த வேறுபாட்டைக் காணலாம். அந்த வேறுபாடுகள் அனைத்தையும் இங்கே எடுத்துக்காட்ட முடியாது' அதற்கென்று ஒரு தனி ஆராய்ச்சி நூல் எழுதவேண்டும். ஆனாலும் உதாரணத்துக்காக இரண்டொரு வேறுபாட்டை இங்கே சுட்டிக் காட்டலாம்; வடமொழி தென்மொழி ஆகிய இரண்டிலும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு நிலைகளும் சொல்லப்படுகின்றன. இந்த நான்கும் வடமொழியில்

தர்ம, அர்த்த, காம, மோக்ஷம் என்ற பதங்களால் குறிக்கப் படும். இந்த நான்கிற்கும் இரண்டு மொழிகளிலும் நோக்கமும் பயனும் ஒன்றே. வடமொழி சாஸ்திரங்களின் படி ஒருவன் மோக்ஷம் அடையவேண்டுமானல்—அதாவது வீடு பெறவேண்டுமானல் (மோக்ஷம்=வீடு) அவன் இல் லறத்தையும் மனைவி மக்களையும் துறந்துவிட்டுத் தனித் திருந்து தவம் செய்ய வேண்டும் என்பது கட்டாய மாக்கப்படுகிறது.

ஆனல் திருக்குறள் மோட்சம் அடைவதற்கு இல்லறத் தைத் துறக்க வேண்டிய அவசியம் இல்லையென்று

அறத்தாற்றி னில்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

அறவழியில் இல்வாழ்க்கை நடத்தினல் புறவழியாகிய துறவறத்துக்குப் போய்ப் பெறக்கூடிய பயன் என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை—என்றும்,

இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

சரியான முறையில் இல்வாழ்க்கை நடத்துகிறவன் மோக்ஷம் அடைய முயல்கின்ற தவசிகளுக்கெல்லாம் மேலானவன்—என்றும்.

ஆற்றி னொழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

அறநெறியில் வழுவாமல் ஒழுங்கான முறையில் நடத்தப் படும் இல்வாழ்க்கை (பசி தாகம் முதலிய துன்பங்களைப் பொறுத்துக்கொண்டு) நோன்பிருந்து தவம்புரிவதைவிடச் சிறப்பும்பொறுப்புமுள்ள நோன்பாகும்—என்றும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இல்லறம் நடத்தி உலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன், மோட்சமடைவதற்கென்று வேறு முயற்சி எதையும் செய்யாமலேயே தெய்வத்தோடு சேர்க்கப்பட்டு விடுவான். அதாவது இல்வாழ்க்கையைச் சரியானபடி நடத்தி வாழவேண்டிய வழியில் வாழ்ந்தாலே போதும். அவன் கடவுளோடு கலந்துவிடுவான்.

என்றும் திருக்குறள் வலியுறுத்துகின்றது.

இன்னொரு உதாரணம்: வடமொழி சாஸ்திரங்களில் யாகங்கள் செய்வதையும் அந்த யாகங்களில் உயிர்ப் பலி கொடுத்துப் பலியிட்டு அவிர்ப்பாகமான விலங்கின் மாமி சத்தை உண்பதையும் புனிதமான காரியங்களாகக் கொள் ளப்படுகின்றன.

இதைத் திருவள்ளுவர் வன்மையாகக் கண்டித்து

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

உயிர்ப்பலி கொடுத்து ஆயிரம் யாகங்களைச் செய்வதைவிட ஒரு உயிரைக் கொன்று அதன் உடலைப் புசிக்காமல் இருப் பது மேலானது—என்கிறார்.

மேலும் வாழ்க்கைக்கு விதிகளை வகுக்கும் வடமொழி சாஸ்திரங்கள் பலவும் பெண்மக்களை ஆண்மக்களுக்கு மிகவும் இளைத்தவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும்தான் பேசுகின்றன.

ஆனல் திருக்குறளில் பெண்ணுக்கும் சரிநிகர் சமத்து வம் கொடுத்துப் பெண்ணை ஆணுக்கு வாழ்க்கைத் துணை யாகப் போற்றப்படுகிறது.

இப்படி இன்னும் பல வேறுபாடுகளை வடமொழிக்கும் தமிழுக்கும் இடையே காணலாம். அதனல் 'தமிழில்

உள்ள எல்லா அறிவும் வடமொழியிலிருந்து வந்தவை' என்பது உண்மைக்கு ஒத்ததன்று.

அடுத்தபடியாக 'வடமொழியிலிருந்து எந்த அறிவும் தமிழுக்கு வரவில்லை. வடமொழிக்கும் அறிவுண்டாக்கியது தமிழ்தான். எப்படியெனில் ஆதிகாலத்தில் வடநாடு முழுவதிலும் தமிழர்கள் தாம் வசித்தார்கள். அங்கே தமிழ்தான் மொழியாக இருந்தது என்ற உண்மை ஆராய்ச்சியால் அறியக்கிடக்கிறது. வடநாட்டில் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் தமிழர்கள் வெகு நாகரீகமுள்ளவர்களாக வாழ்ந்த போதுதான் ஆரியர்கள் இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்து அங்கே குடியேறினார்கள். தமிழர்களோடு பழகித் தமிழறிவை அடைந்தபின் அதைக் கொண்டுதான் ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்தை உண்டாக்கினார்கள் என்ற வாதத்தை ஆராய்வோம்.

இது இனப்பற்றும் மொழிப்பற்றும் மிகைப்பட்ட ஆவேசப் பேச்சு. வடமொழியிலிருந்துத் தமிழுக்கு எந்த அறிவும் வரவில்லை யென்பது அறியாமை. ஆன்மஞானத்தைச் சேர்ந்த அறிவுகள் பல தமிழுக்கு வடமொழியிலிருந்து வந்தவைகளே.

ஒரே ஒரு உதாரணம் போதும். அது 'பகவத்கீதை'. பகவத்கீதை தமிழிலக்கியம் அல்ல. அன்றியும் அதிலுள்ள மெய்யறிவைச் சொல்லுகின்ற ஒரு நூல் தமிழில் இல்லை. சரித்திரத்துக்கு எட்டாத காலந்தொட்டுத் தமிழ்மக்கள் இந்த கீதையைத் தமதாகவே போற்றிவருகிறார்கள். கீதையிலுள்ள அறிவைக்கொண்டு இயற்றப்பட்டத் தமிழ் நூல்கள் எண்ணில!

நெடுங்காலமாகத் தமிழில் பேரறிஞர்களாக விளங்கிய அனைவரும் தமிழையும் வடமொழியையும் தமது இரு கண்களேபோல் போற்றியிருக்கிறார்கள்.

தேவாரம் பாடிய நாயன்மார்களும் திருவாய்மொழி பாடிய ஆழ்வார்களும் வடமொழியையும் தமிழையும் தெய்வ மொழிகளாகக் கருதியிருக்கிறார்கள்.

தாயுமானவரும் திருவருட்பா பாடிய வடலூர் இராமலிங்க வள்ளலாரும் வடமொழியை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர்கள். அவர்களுடைய பாடல்களில் வடமொழி ஞானம் மிளிர்வதைக் காணலாம்

ஆதலால் வடமொழியிலிருந்து எந்த அறிவும் வரவில்லை யென்பது உண்மைக்கு ஒவ்வாது.

இனி 'வடநாடு முழுவதிலும் தமிழர்கள் தாம் ஆதிகாலத்தில் வாழ்ந்தார்கள். எங்கிருந்தோ வந்த ஆரியர்கள் தமிழர்களுடன் பழகித் தமிழைக் கற்றுக்கொண்டுத் தமிழ் அறிவைக் கொண்டுதான் ஆரியமொழியாகிய சமஸ்கிருதத்தை உண்டாக்கினார்கள்' என்ற வாதத்தை ஆராய்வோம்.

ஆதிகாலத்தில் தமிழர்கள் தாம் வடநாடு முழுவதிலும் வாழ்ந்தார்கள் என்பதும் அங்கே தமிழ்மொழிதான் வழங்கியது என்பதும் வெறும் அநுமானம்தான். சரித்திரபூர்வமான ஆதாரங்களைக் கொண்டு உறுதிப்படுத்தக் கூடியதன்று. இதைப் பற்றி ஆராய்ச்சிக்காரர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வகையாகச் சொல்லுகிறார்கள். சில ஆராய்ச்சிக்காரர்கள் தமிழர்கள் வடநாட்டிலிருந்துதான் தென்னாட்டுக்கு வந்ததாகச் சொல்லுகின்றார்கள்.

இது வெகு விபரீதமாகத் தோன்றுகின்றது. மனித உற்பத்தியே நிரட்சர ரேகைக்குச் சமீபமான தென்னாட்டில்தான் உண்டானதென்றும் தென்னாட்டில் இருந்துதான் மக்கள் வடநாட்டுக்குப் போயிருக்க முடியும் என்றும் பல ஆராய்ச்சிக்காரர்கள் எழுதியிருப்பதை அறிவோம். தென்னாட்டுத் தமிழ் மன்னர்கள் வடநாட்டின்மீது படை

யெடுத்து ஆரிய மன்னர்களை வென்றார்களென்றும் இமயத்தில் தம் கொடிகளை நட்டார்கள் என்றும், சின்னங்களைப் பொறித்தார்கள் என்றும், தமிழ் இலக்கியங்களில் பார்க்கிறோம். சேரன் செங்குட்டுவன் வடநாட்டு மன்னர்களை வென்று கண்ணகி சிலைக்காக இமயத்திலிருந்து கல்லைப் பெயர்த்து ஒரு ஆரிய மன்னன் தலையில் சுமக்கச்செய்து கொண்டுவந்ததாகச் சிலப்பதிகாரத்தில் படிக்கிறோம்.

அதனால் தமிழர்கள் தெற்கே யிருந்துதான் வடக்கே போனார்கள், அவர்கள் வடக்கே யிருந்து தெற்கே வந்து குடியேறினவர்கள் அல்லவென்றுதான் தீர்மானிக்கச் செய்கிறது.

அப்படி வடக்கே சென்ற தமிழர்கள் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் நாகரீகமாக வாழ்ந்திருக்கலாம். அதுவும் சரித்திர பூர்வமாக நிச்சயிக்க முடியாத சில உறுதியற்ற ஆதாரங்களைக் கொண்டு சொல்லப்படுகிற அநுமானந் தான். அது உண்மையாகவே இருந்தாலும் அந்தச் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த தமிழர்களுடைய மொழி நாமறிந்த அகத்தியரும் தொல்காப்பியரும் இலக்கணம் வகுத்தத் — தமிழ் மொழியாக இருந்திருக்க முடியாது. ஏனென்றால் அகத்தியர் பொதிகை மலைக்கு வருவதற்கு வெகு காலத்துக்கு முன்னாலேயே ஆரியர்கள் சிந்து நதிப் பள்ளத்தாக்குக்கு வந்து அங்கிருந்த மக்களுடன் பழகி விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதனால் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்தவர்களுடைய மொழி அகத்தியரும் தொல்காப்பியரும் இலக்கணம் வகுத்தத் தமிழ் மொழியல்ல வென்பது உறுதி.

அப்படியானால் ஆரியர்கள் சிந்து நதிப் பள்ளத்தாக்கிற்கு வந்து அங்கிருந்தத் தமிழ் மொழியைக் கற்று அந்தத் தமிழில் இருந்துதான் சமஸ்கிருதத்தை உண்டாக்கினார்கள் என்பது எப்படிப் பொருந்தும்? அப்படிச் சொல்வது

இனவெறியும் மொழிவெறியும் கலந்த ஆவேசப் பேச்சுதான் என்பதில் ஐயமில்லை.

அதனால் 'தமிழிலுள்ள எல்லா அறிவும் வடமொழியிலிருந்து வந்தவைதாம்' என்பதும், 'வடமொழியிலிருந்து ஒரு அறிவும் தமிழுக்கு வரவில்லை. தமிழில் இருந்துதான் வடமொழி உண்டானது' என்பதும் ஆகிய இரண்டும் வெறிப் பேச்சுகளே.

தமிழ் மொழியும் வடமொழியும் ஒன்றிலிருந்து மற்றொன்று உண்டானது என்று சொல்ல முடியாதபடி முற்றிலும் வேறுபட்ட வரி வடிவமும் இலக்கணமும் உள்ளத் தனி மொழிகள். இந்த இரண்டு மொழிகளும் தெற்கிலும் வடக்கிலும் அக்கம் பக்கமாக வாழ்ந்த இரு வேறு சமுதாயங்கள் தனித்தனியே வளர்த்தவை. இந்த இரண்டு மொழிகளுமே எப்போது எவரால் உண்டாக்கப்பட்டனவென்று கண்டறிய முடியாதவை. வடமொழிக்குப் பாணினியும் தென்மொழிக்கு அகத்தியரும் இலக்கணம் வகுத்தவர்களேயன்றி மொழிகளை உண்டாக்கினவர்களல்ல இந்த மொழிகள் உண்டான காலத்தை அறியமுடியாத காரணத்தால்தான் வடமொழியை அநாதியான மொழி என்றும், தமிழ் மொழியை

ஆதிசிவன் பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்.

என்று பாரதியார் பாடியதுபோல் ஆதிசிவன் உண்டாக்கினதாகச் சொல்லப்படுவது.

வடமொழியிலிருந்து தமிழுக்குப் பல அறிவுகள் வந்திருப்பது கண்கூடு. ஆனால் தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்கு எந்த அறிவும் போயிருப்பதாகத் தெரிய

வில்லையே என்ற கேள்வி எழுகின்றது. ஆம்! தமிழ் மொழியிலிருந்து வடமொழிக்கு எந்தக் கருத்தும் போன தில்லை என்றுதான் தெரிகிறது. அதற்கு இரண்டு காரணங்கள் :

ஒரு காரணம் : பண்டைத் தமிழர்கள் அச்சமோ கூச்சமோ அருவருப்போ இல்லாமல் கடல்கடந்த நாடுகளுக்கும் சென்று, வாணிப முறையிலும் நட்புமுறையிலும் ஆங்காங்குள்ள மக்களுடன் பழகி செல்வத்தையும் அறிவையும் சேகரித்தவர்கள். அப்படிப்பட்டவர்கள் அண்டைநாடான வடநாட்டு சமஸ்கிருத இலக்கியங்களையும் விரும்பிக்கற்று அவற்றிலுள்ள நல்லறிவுகளைத் தமிழில் கூட்டிக் கொண்டதில் வியப்பில்லை.

ஆனால் வடமொழிக்காரர்களாகிய பழங்காலத்து ஆரியர்கள் பிறமொழிகளையும் பிற நாடுகளையும் தீண்டப்படாதவைகளாகவே கருதி ஒதுக்கியிருக்கிறார்கள். அவர்களும் பிற இனத்தாரோடு நெருங்கிப் பழகவில்லை. பிறரையும் தம்மிடம் நெருங்கிப் பழக இடங்கொடுக்கவில்லை. அத்துடன் தங்களுடைய மொழியே தேவ பாஷையென்றும் பிற மொழிகள் மிலேச்ச பாஷைகளென்றும் கருதியிருக்கிறார்கள். அதனால் பிற மொழிகளிலிருந்து எந்த அறிவையும் வடமொழியில் கூட்டிக் கொள்ள வில்லை.

இன்னொரு காரணம் : வடமொழி, மக்களுடைய பேச்சு மொழியாக இல்லாமல் வெறும் ஏட்டு மொழியாகவே இருந்ததனால் பிறமொழிக் கருத்துக்கள் அதில் கலக்க வாய்ப்புகள் இல்லாமற் போய்விட்டது.

இந்த மொழிப் பிரச்சினை ஏன் இங்கே விரிக்கப்பட்டது என்றால் மகாத்மா மேற்கொண்டு வாழ்ந்து காட்டிய

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று"

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
தின்னுயிர் நீக்கும் வினை

என்ற இரண்டு குறள்களிலும் உள்ள கொள்கைகளை, அவர் திருக்குறளிலிருந்தா அறிந்து கொண்டார் என்ற கேள்விக்கான விடையை விளக்கத்தான்.

மகாத்மா காந்தி இந்தக் குறள்களிலுள்ள கொள்கைகளைச் செயலில் நடத்திக்காட்டத் தொடங்கியபோது அவருக்குத் தமிழைப்பற்றியோ திருக்குறளைப்பற்றியோ ஒன்றும் தெரியாது என்று முன்னால் சொல்லப்பட்டது.

இந்தக் குறள்களிலுள்ள சாந்தசத்திய சன்மார்க்கமும், தன்னுயிர் போவதாக யிருந்தாலும் பிற உயிரைக் கொல்லக் கூடாது என்ற கருத்தும் இமயம் முதல் ஈழநாடு வரைக்கும் இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிலும் போற்றப்படுவதாகத் தெரிகிறது. இந்த அறிவு எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்குப் போயிற்று என்பதைப் பற்றிய ஆராய்ச்சியே தேவையில்லை.

இதில் நாம் அடைய வேண்டிய அறிவும் மகிழ்ச்சியும் என்னவென்றால் இந்தியநாடு முழுவதிலும் காணப்படுகிற ஆன்மஞான ஒருமைப்பாட்டின் உண்மையே. எத்தனையோ மொழி வேறுபாடுகளையும், நடை உடை வேறுபாடுகளையும், பழக்க வழக்க முரண்பாடுகளையும், அரசியல் போர்களையும் கடந்து இந்த ஆன்மஞான ஒருமைப்பாடு இந்த நாட்டில் நிரந்தரமாக நிலைத்திருக்கிறது. இடையிடையே அது மக்களுடைய புலன்களுக்கு மறைந்து போனாலும் அப்போதைக்கப்போது மகான்கள் தோன்றி அதைப் புலப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மகான்களுள் காந்தி ஒருவரே சத்திய சாந்த சன்மார்க்கத்தையும் தன்னுயிர் போவதானாலும் பிற உயிரைக் கொல்லக்கூடாது என்ற கொள்கையையும் செயலில் காட்டியவர்.

அத்தியாயம் 2.

கம்பநாட்டாழ்வார் அவருடைய காவியத்தில் மகாத்மா காந்தியைக் காட்டுகிறார் என்று காட்டுவதாக, எடுத்துக்கொண்ட விஷயத்தைவிட்டுவிட்டு எது எதையோ விரித்துவிட்டதாக எண்ணவேண்டாம்,

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்திய ஞானிகள் தவங்கிடந்து உணர்ந்து உபதேசித்த சத்திய சாந்த சன்மார்க்கத்தையும் ஜீவகாருண்யத் தன்னல மறுப்பையும் சமீபத்தில் தோன்றிய மகாத்மா காந்தி எப்படி நடத்திக் காட்டினார் என்பதையும், அந்த காந்திமகானைத் தவிர வேறு எந்தச் சரித்திர புருஷனிடத்தும் கண்டதில்லை என்னும் மனப்பண்பையே காந்திக்கு ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கம்பன் தமது இராமாயணத்தில் சித்தரித்திருக்கிறார் என்பதையும், அதனால் தமிழ்மொழிக்குள்ள சிறப்பையும் வாசகர்கள் சுவைத்து ரசிப்பதற்கு, முன் அத்தியாயத்தில் விரிக்கப்பட்ட விஷயங்கள் மிகவும் பயன்படும்.

அப்படி மற்றெவருடைய சரித்திரத்திலும் காணமுடியாதனவாகக் காந்தியிடம் மட்டும் காணப்பட்ட மனப்பண்பும் செயல் முறையும் என்ன வென்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

அவர் சத்தியம், சாந்தம், தன்னலமறுப்பு என்ற பண்புகளின் உச்சி நிலையில் நின்று ஒழுகினார் என்பது மட்டுமல்ல. அந்தப் பண்புகளே கருவிகளாக மகத்தான அடக்குமுறையும் ஆயுத பலமும் உள்ள ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார் என்பது மட்டும் அல்ல.

அவர் எதைத் தம்முடைய வெற்றியாகக் கருதினார் என்பதும் அதற்கு என்ன செயல்முறையை மேற்கொண்டார் என்பதும்தான் முக்கியம்.

அவர் கோரிய வெற்றி எதுவென்றால், தனக்கு எதிரி எந்தவிதமான துன்பத்தை உண்டாக்கினாலும் எவ்வளவு சேதம் உண்டாக்கினாலும் தான் அந்த எதிரிக்கு எந்தவிதமான துன்பமோ சேதமோ உண்டாக்க எண்ணாமல் தன்னுடைய பரிசுத்தமான சகிப்பினாலும் தியாகத்தாலும் எதிரியின் மனிதத் தன்மையில் மறைந்திருக்கும் அன்பு உணர்ச்சியையும், ஆன்ம உணர்ச்சியையும் தூண்டி அவனுக்கு மனமாற்றம் உண்டாக்க வேண்டும் என்பது தான் அவர் கோரிய வெற்றி.

அந்த வெற்றியைக் கருதி அவர் மேற்கொண்ட செயல் முறை என்னவெனில்: எதிரியின் குற்றத்தைச் சாந்தமான சொற்களால் சுட்டிக் காட்டிவிட்டு அவன் அந்தக் குற்றத்தை நீக்கினாலன்றித் தான் உயிர் வாழப்போவதில்லையென்ற விரதம் பூண்டுத் தன் உயிரைப் பணயம் வைத்து உண்ணாவிரதம் இருப்பதே அவர் மேற்கொண்ட செயல். இந்த உண்ணாவிரத நோன்பை அவர், எதிரியின் குற்றத்துக்காக மட்டுமல்லாமல் தன்னுடைய கட்சியில் நேர்ந்த குற்றங்களுக்காகவும் மேற்கொண்டார். அதனால் எதிரிகளும்கூட அவருடைய நோக்கத்தின் தூய்மையை உணர முடிந்தது.

மகாத்மா காந்தி சத்திய சாந்த சன்மார்க்கத்திலும் தன்னுயிரைப் பொருட்படுத்தாத ஜீவகாருண்யத் தன்னல மறுப்பிலும் உச்ச நிலையில் நின்று செயலாற்றிய தனிச் சிறப்புடையவர், என்பது மட்டும் அல்லாமல் இந்த உண்ணாவிரத நோன்பிலும், அதன் நோக்கத்திலும் கூடத் தனிப்பட்டச் சிறப்புள்ளவர். இந்தப் போர் முறை அவருக்கே சொந்தம்.

தம்முடைய கோரிக்கை நிறைவேற வேண்டி உண்ணு விரதத்தை மேற்கொண்டவர்கள் உலகத்தில் பலர் உண்டு. ஆனால் அவர்களுடைய உண்ணுவிரதங்களுக்கும் காந்தியி னுடைய உண்ணுவிரதங்களுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உண்டு.

மற்றவர்களுடைய உண்ணுவிரதம் உணர்ச்சி வசப் பட்டு திடீரென்று தீர்மானித்து மேற்கொள்ளப்பட்டவை. காந்தியினுடைய உண்ணுவிரதம் தவமுறையில் பலமுறை உண்ணுவிரதம் இருக்க நேரும் என்ற தீர்க்கதரிசனத் துடன் பழக்கப்படுத்திக்கொண்ட உண்ணுவிரதம். மற்ற வர்கள் தம்முடைய வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் உண்ணுவிரதம் மேற்கொள்ள முடிந்தது. ஆனால் காந்தி யடிகள் பலமுறை உண்ணுவிரதம் மேற்கொண்டு ஒவ் வொரு முறையும் வெற்றி கண்டவர்.

நாம் எடுத்துக்கொண்ட 'காந்தியடிகளும் கம்பநாட் டாழ்வாரும்' என்ற விஷயத்துக்காக இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால்: மகாத்மா காந்தி தம் உயிரைப் பணயம்வைத்து உண்ணுவிரதம் மேற்கொண்டுத் தெய்வ சிந்தனையோடு தவம்செய்து எதிரியின் மனம் மாறி அவன் தன் குற்றத்திலிருந்துத் திருந்தவேண்டும் என் பதையே தம்முடைய வெற்றியாகக் கருதினர், என்பதே.

அத்துடன், எதிரி திருந்தாவிட்டாலும் அவனுக்குத் தீங்கு செய்வதைவிட அந்த உண்ணுவிரதத்தால் தம் உயிரை விட்டுவிடவும் துணிந்து 'சாகும் வரையிலும் உண்ணுவிரதம்' என்ற தீர்மானத்தோடும் காந்தியடிகள் உண்ணுவிரதம் மேற்கொண்டதுண்டு.

தம்முடைய கட்சி குற்றமற்ற நியாயமுள்ளதாக இருந்தும், எதிரிக்கு இம்சை புரிந்து வெற்றி பெறுவதை விட எதிரிக்கு மனமாறுதல் உண்டாக்கும் முயற்சியாக உண்ணுவிரதம் மேற்கொண்டு உயிரைத் துறப்பதே

மேலான தர்மம் என்று செயல்புரிந்த காந்தியின் மனப் பண்புதான் இங்கே நாம் குறித்துக்கொள்ள வேண்டியது. இந்த மனப்பண்பை காந்தியிடம் தவிர வேறு எந்த சரித்திர புருஷனிடத்தும் கண்டதில்லை.

இதுதான் காந்தி! இதைத்தான் கம்பநாட்டாழ்வார் தமது காவியத்தில் காட்டுகின்றார்.

ஆனால் கம்பராமாயணத்தில் இந்த மேலான தத்து வத்தைச் சிறப்பித்துக் கூறும் பாடலுக்கு இன்றளவும் சரியான உரை சொல்லப்படவில்லை. கம்பராமாயணத் துக்கு உரை செய்தவர்கள் அனைவரும் அந்தப் பாடலுக்கு மிகவும் தவறானதும் முன்னுக்குப்பின் முரண்பட்டதுமான உரையே செய்திருக்கிறார்கள். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு மனப்பண்பை உரையாசிரியர்கள், எவருடைய சரித்தி ரத்திலும் படித்ததில்லை. கட்டுக்கதைகளிலும் கண்டதில்லை. காந்தியடிகளையும் பார்க்கவில்லை அமரருக்கு வாழ்வளிக்க அரக்கர்களைக் கொல்வதற்கே நடந்த இராமாயணக் கதை யில், கொலை புரிவதைவிடப் பட்டினி கிடந்து உயிரை விடுவது மேல் என்று கருதக்கூடிய ஒரு கதாபாத்திரம் இருக்கும் என்று உரையாசிரியர் எண்ணியிருக்க முடியாது தான். ஆனாலும் அவர்கள் அந்தப் பகுதியில் சொல்லியுள்ள உரை முன்னுக்குப் பின் முரணாக இருப்பதைக் கவனிக்கத் தவறியிருப்பது வருந்தத்தக்கதே.

அந்த முரண்பாடுதான் அந்தப் பகுதியிலுள்ள கம்பன் பாடல்களின் கருத்தைச் சரியான முறையில் ஆராயத் தூண்டியது. அந்தப் பாடல்களுக்கு விளக்கமாகக் காந்தி மகானின் வாழ்க்கையும் அவர் நடத்திய சாத்வீகப்போரும் அமைந்தன.

தமிழர்கள் போருக்கு அஞ்சாத சுத்தவீரர்களாகவே விளங்கி வந்திருக்கிறார்கள். போர்முனையில் கொல்லு

வதையோ கொல்லப்படுவதையோ குற்றமான காரியங்களாக எண்ணினதில்லை. போர்முனையில் உயிர் கொடுப்பதைப் போற்றியவர்கள். பால்மணம் மாறாத பச்சிளம் பாலகனையும் பெற்று வளர்த்தத் தாயே வேல் கொடுத்துப் போருக்கு அனுப்பினாள் என்றும்; போரில் மாண்டுபோன மகனுடைய உடலைத் தேடி வந்த ஒரு தாய் தன் மகன் மார்பில் அடிபட்டுச் சாகாமல் முதுகில் அடிபட்டுச் செத்திருந்தால் அவனுக்குப் பாலூட்டிய தன்னுடையத் தனங்களை அறுத்தெறிவேன் என்று சபதங்கூறியதாகவும் பழைய இலக்கியங்களில் படிக்கிறோம். இவைகள் சரித்திர நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, அல்லது கற்பனையாக இருந்தாலும் சரி பண்டைய தமிழரின் வீரஉணர்ச்சியை இவை நிரூபிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

ஆனாலும் தமிழ் மக்கள் நாளடைவில் கொல்லாமை, பொய்யாமை, அன்புடைமை, தெய்வபக்தி, ஆன்மஉணர்ச்சி முதலிய பண்புகளை மிகவும் பேணி வளர்க்கலானார்கள். அந்த வளர்ச்சியின் சிகரந்தான் எக்காலத்துக்கும் எவ்வெவர்க்கும் பயன்படக் கூடியதான உலகப் பொது மறை திருக்குறள். திருக்குறளுக்குப் பின்னால் தோன்றிய தமிழ் இலக்கியங்களெல்லாம் தெய்வ பக்தி, கொல்லாமை, பொய்யாமை முதலிய பண்புகளுக்கே சிறப்பிடம் கொடுத்திருப்பதைக் காணலாம்.

கல்வியிற் பெரிய கவிச் சக்ரவர்த்தி கம்பன் தனது இராமாயணத்தைத் திருக்குறளுக்கு விளக்கம் கூறும் ஒரு இலக்கியம் போலும், திருக்குறளை நடத்திக்காட்டும் ஒரு நாடகம் போலும் அமைத்திருப்பது ஒரு அற்புதம்.

திருக்குறளிலுள்ள மேலான அறிவுகளை மிகவும் பொருத்தமான இடங்களில் அங்கங்கே பொலிவுறச் செய்திருக்கும் தலைசிறந்தத் தமிழ்க் காவியமாகிய தனது இராமாயணத்தில்:

நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கம் கடை

மிகப்பெரிய நன்மை உண்டாக்கக் கூடிய சம்பத்து வருவதானாலும் கொலை செய்து அதை அடைவதை மேலோர்கள் இழிவாகத்தான் கருதுவார்கள்—என்றும்,

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று

தலைசிறந்த நல்லறிவு கொல்லாமை; அதற்கடுத்த நல்லறிவு பொய் சொல்லாமை-என்றும்,

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை

தன்னுடைய உயிர் போவதானாலும் இன்னொரு உயிரைப் போக்கும் கொலையை செய்யக்கூடாது - என்றும். திருக்குறள் போதிக்கின்ற நல்லறிவுகளை எந்த இடத்தில் எப்படிப் புகுத்தி வைப்பது என்று கம்பன் பலகால் எண்ணியெண்ணிப் பார்த்திருப்பார் போலும்.

இராமன் இராவணனைக் கொல்லுவதற்கென்றே அவதாரம் செய்தவன். இராவணனை மட்டுமா எண்ணிறந்த அரக்கர்களையும் கொல்ல வேண்டியவன். அப்படிப்பட்டவன் கொல்லாமையை மேற்கொள்ளவும் முடியாது. உபதேசிக்கவும் இடமில்லை. நல்லறிவுகளுக்கெல்லாம் நிலையமாகிய இராமனே கொல்லாமையின் சிறப்பைப் பற்றிப் பேச முடியாதென்றால் இராமாயணத்தில் வரும் வேறு எவர் அதைச் சொல்லமுடியும்? இலக்குவனோ இராவணாதியரைக் கொல்வதில் இராமனைவிடத் தீவிரம் கொண்டவன். சீதையோ என்றால்

கொண்ட போரினுங் கொற்றவன் விற்றொழில்
அண்டரேவரும் நோக்க என் ஆக்கையைக்

கண்ட போரரக்கன் விழி காகங்கள்
உண்ட போதன்றி யான்உளென் ஆவெனோ

மேற்கொண்டிருக்கிற இந்தப் போரில் உங்களுடைய வெற்றித் தலைவராகிய (என் கணவர்) இராமபிரான் தேவர்களெல்லாம் கண்டு மகிழும்படியான வில்லாற்றல் புரிந்து என் உடம்பை காமக் கண்கொண்டு பார்த்த இராவணனைக் கொன்று உயிரற்ற அவனுடைய கண்களைக் காகங்கள் கொத்தித் தின்றாலல்லாமல் நான் உயிரோடு இருப்பேனா?-என்று அநுமானுக்கு அசோக வனத்தில் சூளாமணி கொடுத்து விடைதந்தபோது சொல்லுகிறாள். அப்படிப்பட்ட சீதை கொல்லாமை பற்றி எண்ணவும் கூடுமா?

இராமன் சாதாரண மனிதன் அல்லன். அவன் யாரெனின் :

மூலமும் நடுவும் ஈறும் இல்லதாய் மும்மைத்தாய
காலமும் கணக்கும் நீத்த காரணன் கைவில்லேந்தி
சூலமும் திகிரிசங்கும் கரகமும் துறந்துத் தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டயோத்தி
-வந்தான்

ஆதி மத்யம் அந்தம் இல்லாதவனாய் (ஆதிமத்யாந்த ரசிதனாய்) இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற கால வரம்புகளுக்கு அப்பாற்பட்டவனாய், அவற்றிற்கெல்லாம் காரணமாக இருப்பவனாகிய பரம்பொருள். அவன் சிவனாக வேலை செய்கிறபோது கையில் வைத்திருக்கும் சூலாயுதத்தையும், விஷ்ணுவாக இருக்கும்போது கைகளில் இருக்கும் சங்கு சக்கரத்தையும், பிரம்மனாக இருக்கும்போது கையில் இருக்கும் கரகத்தையும் விட்டுவிட்டு ஒரு வில்லைக் கையிலெடுத்துக் கொண்டு, விஷ்ணுவாக இருக்கும் போது படுத்திருந்த ஆலிலையையும், பிரம்மனாக இருக்கும் போது வீற்றிருந்த தாமரை மலரையும் சிவனாக வீற்றிருந்த

வெள்ளி மலையையும் விட்டுவிட்டு அயோத்தியில் அவதரித்திருக்கிறவன். அதாவது மும்மூர்த்திகளுக்கும் மூலமான பரம்பொருள்-என்று அநுமான் இராவணனுக்குச் சொல்லுகிறான்.

அப்படியிருந்தும், இராமன் தன்னுடைய தெய்வத் தன்மையைக் காட்டிக்கொள்ளாமல் ஒரு இராஜகுமாரனாகவும் வீரனாகவும் சான்றோனாகவுமே நடந்துகொள்ளுகிறான். அப்படிப்பட்ட சான்றோனாகிய இராமன் தவிர்க்க முடியாமல் தான் மேற்கொண்ட கடமையாகக் கொலைத் தொழிலாகிய இராவண வதத்தைச் செய்து விட்டாலும் 'நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை என்ற முறையில் கொலை செய்வதில் அருவருப்பாவது காட்ட வேண்டாமா?

அந்த அருவருப்பை வெகு அழகான முறையில் காட்டி விட்டான் கம்பன் காவியத்திலுள்ள இராமன். அதனால் திருக்குறளில் உள்ள பல நல்லறிவுகளையும் விளக்குகின்ற கம்ப ராமாயணத்தில், தலையாய நல்லறிவாகிய கொல்லாமை என்பதைப் பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லையே என்ற குறை நீங்கிவிடுகிறது.

'இராவணனைக் கொன்றதனால் வரக்கூடிய நன்மை மிகப் பெரிய சம்பத்துதான் என்றாலும் கொலைபுரிந்து அடைந்த இந்த சம்பத்து இகழத் தக்கதுதான்' என்றே வாய்விட்டுச் சொல்லி வருந்துகின்றான் இராமன்.

அந்த இடத்தில்தான் கம்பநாட்டாழ்வார், அவர் காணாத காந்தி என்ற சான்றோனை, நமக்குக் காட்டுகின்றார். அதாவது மகாத்மா காந்தியே பேசுவதுபோல் இராமன் பேசுவதைச் சித்திரித்திருக்கிறார். அது நமக்கு வியக்கத் தக்க இலக்கிய விருந்தல்லவா?

எந்த இடத்தில் இராமன் அப்படிக் கொலை செய்வதை அருவருத்துப் பேசுகின்றான் என்பதையும், கொல்லாமை

யைச் சிறப்பிக்கின்ற அந்தப் பாடல்களை உரையாசிரியர்கள் எப்படிக் கொலை செய்து பொருள் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இனி கூர்ந்து கவனிக்க வேண்டும்.

பழைய உரையாசிரியர்களையோ, அல்லது அவர்கள் செய்தத் தவறான உரைகளையே பின்பற்றிப் பாடம் சொல்லிக் கொடுக்கும் தமிழறிஞர்களையோ இகழ்வதாக எண்ணிவிடாமல் வாசகர்கள் விருப்பு வெறுப்புக்கு இடங் கொடாமல் தொடரவேண்டும்.

காந்தியடிகளை நமக்கு நினைப்பூட்டுகின்ற கம்பன் பாடலைச் சரியாகப் புரிந்துகொள்ள அதற்கு முன்னால் உள்ள சில பாடல்களை ஆராய வேண்டும். அப்போதுதான் பழைய உரைகளிலுள்ள முரண்பாடும் தவறான உரைகளும் தெரிய வரும்.

இந்தப் பாடல்கள் யுத்த காண்டத்தில் 'இராவணன் வதைப்படலத்தில்' உள்ளவை.

இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்தக் கடைசிப் போர் ஆகாயத்தில் நிகழ்ந்தது. இராவணனுக்கு ஆகாயத்திலும் பறக்கக்கூடிய தேர் உண்டு. இராமனிடத்தில் அப்படிப்பட்ட தேர் இல்லை. அதனால் சிவபெருமானுடைய தூண்டுதலால் தேவேந்திரனுடைய தேர் இராமனுக்கு அனுப்பப்படுகிறது. அந்தத் தேரும் ஆகாயத்தில் பறக்கக் கூடியது. அந்த இந்திர விமானத்தின் சாரதியின் பெயர் மாதலி என்பது. இராமன் அந்தத் தேரிலேறிப் போர் புரிகிறான். நெடுநேரம் வெகு கோரமான யுத்தம் நடந்தது. பல முறை இராமன் இராவணனுடைய சிரங்களையும் கரங்களையும் துண்டித்து வீழ்த்துகிறான். ஆனால் இராவணன் அருந்தவங்கள் புரிந்து அடைந்திருந்த வரங்களின் மகிமையால் வெட்டுண்டு விழுந்துவிட்டத் தலைகளுக்கும் கைகளுக்கும் பதிலாகப் புதுப்புது தலைகளும் கைகளும் முளைக்கின்றன.

கடைசியாக இராமன் மந்திர சக்தி கூடிய பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்கிறான்.

"அக்கணத்தின் அயன் படை ஆண்தகைச்
சக்கரப் படையோடும் தழீஇச் சென்று
புக்கது அக்கொடியோன் உரம் பூமியும்
திக்கனைத்தும் விசும்பும் திரிந்தவே."

அந்தக் கணத்திலேயே பிரமாஸ்திரமானது திருமாலின் சக்தியோடு வேகமாகப் பாய்ந்து கொடியவனான இராவணனுடைய மார்பில் பாய்ந்து அதனைத் துளைத்துப் புகுந்து விட்டது அதைக் கண்டு பூமியும் ஆகாயமும் எல்லா திசைகளும் சுழன்றன.

அப்படி இராவணனுடைய மார்பில் பாய்ந்த அந்த பிரமாஸ்திரம் என்ன செய்தது என்றால்,

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும் ஏனைத்
திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கோடி உயிர் பருகிப் புறம்போயிற்று
இராகவன்தன் புனிதவாளி.

இராமன் பாய்ச்சிய புனிதமான பிரமாஸ்திரம் இராவணனுடைய மார்பில் புகுந்து (அவன் கைலாய மலையை அசைத்துப் பரமசிவனால் அழுத்தப்பட்டுப் பின் சாமவேதம் பாடிப் பரமசிவனிடத்தில் பெற்ற) மூன்று (அரை) கோடி ஆண்டு வாழ்நாளையும், (ஆயுள்) அவன் பெருந்தவங்கள் செய்து அவற்றால் அடைந்த வரங்களையும் முன்னே பிரமதேவன் 'எந்தக் கோடியிலிருந்து யார் வந்தாலும் உன்னை வெல்ல முடியாது' என்று கொடுத்திருந்த வரத்தையும் மற்றும் உலகத்தின் எல்லாத் திக்குகளினும்

போரில் வெற்றி கண்ட தோளாற்றலையும் விழுங்கி அவனுடைய உயிரையும் குடித்துவிட்டு வெளியே போய் விட்டது.

உயிர் போன இராவணனுடைய மலைபோன்ற உடல் ஆகாயத்திலிருந்த தேரிலிருந்து பூமியில் விழுகின்றது.

கார்நின்ற மழைநின்றும் உறும் உதிர்வது
எனத் திணிதோள் காட்டில் நின்றும்
தார்நின்ற மலைநின்றும் பணிக்குலமும்
அணிக்குலமும் தகர்ந்து சிந்தப்
போர்நின்ற விழிநின்றும் பெறிநின்று
புகையோடும் குருதி பொங்கத்
தேர்நின்றும் நெடுநிலத்துச் சிரமும்கீழ்ப்
படவிழுந்தான் சிகரம் போல்வான்.

கருமையான மேகத்திலிருந்து இடிகள் (மின்னலுடன்) உதிர்வதைப்போல், மரங்கள் நெருக்கமாகவுள்ள காடு போன்ற இருபது புயங்களிலிருந்தும் மாலையணிந்த மலை போன்ற மார்பிலிருந்தும் ஆபரணங்களும் நவரத்தினங் களும் உடைந்து சிதறும்படியாகவும், பயங்கரமான கண்களிலிருந்தும் (மூக்கு, வாய், செவி முதலிய) மற்றப் பொறிகளிலிருந்தும் புகையோடு கூடிய இரத்தம் பொங்கி வெளிவரும்படியாக ஆகாயத் தேரிலிருந்துத் தலைகீழாகப் பூமியில் விழுந்தான், மலை போன்ற இராவணன்.

அப்படி விழுந்த உயிரற்ற இராவணனுடைய இருபது முகங்களும் எப்படித் தோற்றமளித்தன என்றால் :

"வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
மனமடங்க வினையம் வீயத்
தெம்மடங்கப் பொருதடக்கைச் செயலடங்க
மயலடங்க ஆற்றல் தேயத்

தம்மடங்கு முனிவரையும் தலையடங்கா
நிலையடங்கச் சாய்த்த நாவின்
மும்மடங்கு பொலிந்தன அம் முறை துறந்தான்
உயிர் துறந்த முகங்கள், அம்மா!"

கொடூரமாகிய சிங்கம் சீறுவதைப் போன்ற கோபம் அடங்கி, மனம் அடங்கி, தந்திர சாமர்த்தியமெல்லாம் ஒழிந்து, பகைவர்கள் அடங்கி ஒடுங்கும்படியாகப் போர் புரியும் வலிமை மிக்கத் தோளாற்றல் தொலைந்து, சீதை யின்மீது கொண்ட அடங்காத காம ஆசையும் அடங்கி, மற்றுமுள்ள திறமைகளும் அழிந்து (உயிரற்றப் பிண மாகக் கிடக்கும்) முறைகெட்ட இராவணனுடைய பத்து முகங்களும், முன்னே அவன் (தன்னுடைய பகைவர்களை மட்டும் அல்லாமல்) ஐம்புலன்களையும் அடக்கித் தவம் புரியும் யோகிகளாகிய முனிவர்களையும்கூடத் தலைகாட்ட முடியாதபடி நிலைகுலையச் செய்து வெற்றி காணும்போது எவ்வளவு மகிழ்ச்சியுடன் பொலிவுற்று விளங்குமோ அதை விட மூன்று பங்கு அழகுடன் பிரகாசித்தன.

இராவணன் எப்போதும் போர் வெறி கொண்டவ னுகை, பிறர் போர் தொடுக்காவிட்டாலும் தானே வலியச் சென்றுப் பிறரைப் போருக்கிழுத்து அவர்களை வென்று களிப்படைவான். அப்படிப் போர் புரிய வேற்றரசர்கள் கிடைக்காத போதும் கானகங்களில் தவம் செய்துகொண் டிருக்கிற முனிவர்களையாவது இம்சித்துக் களிப்படைவான். அது அவனுக்கு மகிழ்ச்சி தரும் விளையாட்டு!

இராவணன் உயிரிழந்து ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்துவிட்டவுடனே இதுவரையிலும் அவனைச் சமீபத்தி லிருந்து பார்க்காத இராமன் அவனுடைய உருவத்தை அருகிற் சென்று பார்க்க விரும்பித் தான் இருக்கும் இந்திர னுடைய தேரை பூமியில் இறக்கச்சொல்லி இராவண னுடைய சவத்தைப் பார்க்கிறான்.

"பூதலத்த தாக்குவா யாகஇனிப்
பொலந்தேரை யென்றபோதின்
மாதலிப் பேரவன்கடவ மண்டலத்தின்
அப்பொழுதே வருதலோடும்
மீதலேத்த பெருந்தாரை விசும்பளப்பக்
கிடந்தான்றன் மேனிமுற்றும்
காதலித்த உருவாகி அறம்வளர்க்கும்
கண்ணனை தெரியக்கண்டான்."

(இராமன், தேரின் சாரதியாகிய மாதலியிடம்) 'அழகிய தேரை பூமிக்கு இறக்கு' என்று சொல்ல, மாதலியும் உடனே அதைப் பூமிக்கு இறக்கினான். தேரில் இருந்தபடியே, அறத்தை வளர்க்கும் கண்ணனாகிய இராமன், உடலிலிருந்து பொங்கி வெளியாகும் இரத்தம் ஆகாயத்தை நோக்கிப் பீரிடும்படி இரத்த வெள்ளத்தில் கிடந்த இராவணனுடைய உடலின் அமைப்பு முழுவதும் ஆசையோடு பார்க்கத் தகுந்த (அபூர்வமான) உருவமாகத் தெரிவதைக் கண்டான் என்பதுதான் இந்தப் பாடலிலுள்ள சொற்களால் அறியக்கூடிய பொருள்.

ஆனால் இந்தப் பாடலுக்கு உரையாசிரியர் செய்திருக்கிற அர்த்தம் பொருத்தமானதாக இல்லை. கம்பராமாயணம் முழுவதுக்கும் உரை இயற்றியுள்ளவர் திரு. வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் அவர்கள். அந்த உரைதான் சிறந்த உரையாக கருதப்பட்டு வருகிறது. கம்பராமாயணத்தைப் போதிப்பவர்கள் அந்த உரையைப் பின்பற்றித்தான் உரை சொல்வது வழக்கம்.

அந்த உரையில் இந்தப் பகுதிக்குக் காணப்படும் முரண்பாட்டைத்தான் இந்தக் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. இந்த உரையாசிரியர் வணங்கத் தகுந்த மிகப் பெரிய அறிஞர்.

ஆனாலும் அவருக்கும் புலப்படாமற் போன ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுவது குற்றமாகாது.

இனி மேலுள்ளச் செய்யுளுக்கு இந்த உரையாசிரியர் செய்துள்ள பொருளைப் பார்ப்போம்:

அந்த உரைநூலில் உள்ளபடியே கீழே இருக்கும் பொழிப்புரையும் விளக்கமும் ஆராயத்தக்கன:

(இ - ள்) 'நீ சாரத்தியஞ் செய்கின்ற இந்த அழகிய தேரைப் பூதலத்தில் ஆக்குவாயாக' என்று (ஸ்ரீராமன் மாதலிக்குக் கட்டளையிட்ட) போதிலே, மாதலியென்ற பேரையுடைய அந்தப் பாகன் தூண்டப் பூதலத்தில் அப்பொழுதே (தேர்) வருதலோடும் அறத்தை வளர்க்கின்ற கருணையுடையவனாகிய ஸ்ரீராமன் — மேலே அலைமோதிக் கொண்டுள்ள மிக்க (இரத்தப்) பெருக்கு விசும்புவரையிற் செல்லக் கிடந்தானுடைய மேனி முழுதும் (தான்) காதலித்த உருவாகித் தோன்றக் கண்டான்; (எ - று)

இது உரைநூலிலுள்ள பொழிப்புரை. இதற்கு விளக்கமாக: இது இராவணன் விழுந்து கிடந்த இடத்தை இரதம் அணுகியதும், அத்தேரிலிருந்தபடியே அவனைக் கண்டமை கூறிற்று. தேரினின்று இறங்கி இராவணனைக் கண்டமையை அடுத்த செய்யுள் கூறும்.

'இராவணனது உள்ளே யிருந்த ராகம் (ராகம்: காதலும் செந்நிறமும்: சிலேடை) மேலே எங்கும் வழிந்ததோ' என்று கருதப்படுமாறு அவனது உடலெங்கும் இரத்தப் பெருக்கினால் ராகத்தையடைந்து விழுந்திருப்பதை ஸ்ரீராமன் கண்டானென்பதாம். 'தன் மேனி முற்றும் காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணனை' — என்ற தொடர் — தன் உடல் முழுவதும் கண்டாரெவரும் விரும்பத்தக்க எல்லா லட்சணங்களும் அமையப் பெற்றுத் தருமம் வளர்க்கத் தோன்றிய கருணைவான் என்று பொருள்பட்டு ஸ்ரீராமனைக் காட்டுமெனினும் ஆம்.

இது உரை நூலிலுள்ள விளக்கம்.

இந்த உரையினும் விளக்கத்திலும் 'காதலித்த உருவாகி' என்ற பதங்களுக்குச் 'சீதையைக் காதலித்த உருவமாக' என்று பொருள் சொல்லப்படுகிறது. அதாவது இராவணனுக்குச் சீதைமேல் இருந்த காம ஆசையெல்லாம் வெளிவந்து அவனுடைய உடல் முழுவதிலும் இரத்தமாகப் பரவிக் கிடப்பதை இராமன் கண்டான் என்று பொருள் சொல்லப்படுகிறது. அதற்காக 'ராகம்' என்ற பதம் வலியப் புகுத்தப்பட்டிருக்கிறது. 'ராகம்' என்ற பதத்துக்கு 'செந்நிறம்' என்றும் 'காம ஆசை' என்றும் அர்த்தங்கள் உண்டு. அதனால் 'காதலித்த உருவாகி' என்பதற்குக் 'காதல் என்ற சிவப்பு நிறம் இராவணன் உடல் முழுதும் வழிந்தோடிய இரத்தமாகக் காணப்பட்டது' என்ற சிலேடைப் பொருள் கூட்டப்பட்டிருக்கிறது. இப்படி வலிந்து பொருள் கொண்டது பொருத்தமற்றதாக இருப்பதோடு முந்தின செய்யுளுக்கு முரணாகவும் இருக்கிறது. முந்தின செய்யுளில் :

வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க
    மனமடங்க வினையம் வியத்
தெம்மடங்கு பொருதடக்கைச் செயலடங்க
    மயலடங்க ஆற்றல் தேயத்
தம்மடங்கு முனிவரையும் தலையடங்கா
    நிலையடங்கச் சாய்த்த நாளின்
மும்மடங்கு பொலிந்தன அம்முறைதுறந்தான்
    உயிர்துறந்த முகங்கள் அம்மா!

என்றபடி இராவணன் உயிர் துறந்தபோதே அவனுக்குச் சீதைமேல் இருந்த ராகம் (மயல்) அடங்கிவிட்டது. பின் எப்படி அந்த மயல் இரத்தமாகப் பொங்கி வெளியாகும்?

இராவணனுடைய உருவம் ஆசையோடு பார்க்கத் தகுந்த அழகுடையது என்று சொல்ல மனம் வராமல் உரை

ஆசிரியர் 'காதலித்த உருவாகி' என்பதற்குக் 'காதலாகிய இரத்தச் சிவப்புப் படிந்த உருவாகி' என்றும், அந்த 'காதலித்த உருவாகி' என்ற அடைமொழியை இராமனுக்குக் கூட்டித் 'தன் உடல் முழுதும் கண்டாரெவரும் விரும்பத் தகுந்த எல்லா லட்சணங்களும் அமையப்பெற்றுத் தருமம் வளர்க்கத் தோன்றிய கருணாவான் என்று பொருள்பட்டு ஸ்ரீராமனைக் காட்டுமெனினும் ஆம்' என்றும் உரை தருகிறார். இந்த இரண்டுவிதப் பொருள்களும் தவறு என்பதையும் கம்பன் கருத்துக்கு அவை பொருந்தமாட்டா என்பதையும் அடுத்தச் செய்யுள் நிச்சயப்படுத்துகிறது.

பூமிக்கு இறக்கப்பட்டத் தேரில் இருந்தபடியே, இராவணனுடைய உடல் 'காதலித்த உருவாக' இருக்கக் கண்ட இராமன் அந்த உருவத்தை நெருங்கி இன்னும் நன்றாகப் பார்க்க விரும்பித் தேரைவிட்டு இறங்கி இராவணனுடைய சடலத்தைக் கூர்ந்து பார்க்கிறான்.

"தேரினைநீ கொடுவிசும்பிற் செல்கென்ன
    மாதலியைச் செலுத்திப் பின்னர்ப்
பாரிடமீ தினில்நணுகித் தம்பியொடும்
    படைத்தலைவர் பலரும் சுற்றப்
போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
    போர்வீரன் பொருது வீழ்ந்த
சீரினையே மனமுவப்ப உருமுற்றும்
    திருவாளன் தெரியக் கண்டான்."

திருமகள் நாயகனாகிய இராமன், தேர்ப்பாகனாகிய மாதலியைப் பார்த்து 'நீ தேரினை (இந்திரனிடத்தில் திருப்பிக் கொடுத்துவிட) ஆகாயத்தில் செலுத்திக்கொண்டுப் போய் விடுக' என்று சொல்லி அவனுக்கு விடைகொடுத்துவிட்டுத் தேரைவிட்டு இறங்கித், தம்பியாகிய இலக்குவனும் பல படைத் தலைவர்களும் சூழச்சென்று, இதுவரைக்கும் எவ

ரிடத்திலும் போர்முனையில் தோல்வியடைந்து, புறமுதுகு காட்டாத போர்வீரனாகிய இராவணன், தன்னோடு வெகு திறமையோடு போர்புரிந்து உயிர்துறந்தச் சிறப்பினையே எண்ணியெண்ணி மெச்சி மனம் மகிழ்ச்சியடைந்த வண்ணமாகவே அவனுடைய உருவம் முழுவதையும் கூர்ந்து பார்த்தான்.

இந்தச் செய்யுளுக்கு உரையாசிரியர் சரியான உரை செய்திருக்கிறார். இந்தச் செய்யுள் இக்கட்டுரைக்கு ஜீவநாடி போன்றது. இந்தச் செய்யுள் இராவணனது சிறப்பை உள்ளபடி சொல்லுகின்ற கவிக்கூற்று. இராவணனைப் புகழ்ந்து பேசக் கடமையோ கரிசனமோ உள்ள ஒருவருடைய கூற்று அன்று.

இந்தச் செய்யுளிலுள்ள கருத்துதான் இதற்குப் பின்னால் வரும் செய்யுள்களுக்குச் சொல்லப்பட்டு வருகிற உரைகளில் உள்ள முரண்களை ஆராயத் தூண்டிக் கம்பராமாயணத்தில் காந்தியடிகளைக் காணச் செய்கிறது.

இந்தச் செய்யுளில் கவனிக்கவேண்டிய முக்கியமான கருத்து என்னவென்றால் இராவணன் இராமனுடைய பாணத்தால் கொல்லப்படுகிற வரைக்கும் போர்முனையில் புறங்கொடுத்ததில்லை. அதுமட்டுமா? இதுவரைக்கும் அவன் போர்புரிந்த எவரும் காட்டாத அபூர்வமான ஆற்றலுடன் தன்னைத் திணரச்செய்துவிட்ட இராமனுக்கும் அஞ்சிப் புறங்கொடுக்காதவன். நெடுநேரம் போர் புரிந்தபின் இராமனை வெல்ல முடியாது என்று கண்ட பின்னும் புறங்கொடுக்க எண்ணாதவன். அவனுடைய 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடா' வீரத்தைக் காண அவன் இறப்பதற்கு முன்னால் போர்க்களத்திலேயே சொன்ன வஞ்சினத்தை இங்கே நினைப்பூட்டுவது பொருந்தும்.

தான் கடுந்தவங்கள் செய்து, பிரமனிடத்திலும் சிவனிடத்திலும் திருமாலிடத்தும் பெற்ற அஸ்திரங்களை

யெல்லாம் அழிக்கின்ற இந்த இராமன் யாராக இருக்கக் கூடும் என்று எண்ணிய இராவணன்,

" சிவனோ வல்லன் நான்முக னல்லன் திருமாலாம்
அவனோ வல்லன் மெய்வர மெல்லா மடுகின்றான்
தவனோ வென்னிற் செய்து முடிக்கும் தரனல்லன்
இவனோ தானவ் வேதமுதற்கா ரணனென்றான்.''

நான் பெற்ற சத்தியமான வரங்களையெல்லாம் அழிக்கின்ற இவன் சிவனாக இருக்கலாமோ என்றால் சிவன் அல்லன்; பிரமனாக இருக்குமோ என்றால் அவனும் அல்லன்; ஒருக்கால் திருமாலாக இருக்கலாமோ என்றால் அவனும் அல்லன்; அல்லது ('கரியமாலினும் கண்ணுதலானினும் உரிய தாமரை மேலுறைவானினும் பெரியர் அந்தணர்' என்றபடி) தவ வலிமையுள்ளத் தவசியாக இருப்பானோ என்றால், மிக்க இளம் பிராயமுள்ளவனாக இருக்கும் இவன் தவம் செய்து முடித்திருக்கும் தகுதியுடையவனாகத் தெரியவில்லை. அதனால் இவன் (இராமன்) வேதத்துக்கு மூல காரணன் ஆன பரம்பொருளாகத்தான் இருப்பானோ! என எண்ணுகிறான்.

இப்படி எண்ணிய இராவணன் அடுத்தக் கணத்திலேயே என்ன சொல்லுகிறான் பாருங்கள்:

'' யாரேனுந்தான் ஆகுகயான்என் தனியாண்மை
பேரேன் இன்றே வென்றிமுடிப்பன் பெயர்கில்லேன்
நேரேசெல்வென் கொல்லுமெனிற்றா னிமிர்வென்றி
வேரேநிற்கும் மீள்கிலன் என்னா விடலுற்றான்.''

இந்த இராமன் (சிவனோ, பிரமனோ, திருமாலோ, தவசியோ! பரம்பொருளோ) யாராக இருந்தாலும் இருக்கட்டும்; நான் என்னுடைய தனி ஆண்மையை விட்டு விலகமாட்டேன். இன்றே இவனை வென்று தீர்ப்பேன்; இந்த உறுதியிலிருந்து அசையமாட்டேன்; நேரே சென்று இவனைக் கொல்லுவே

னென்றால்தான் உயர்ந்த வெற்றி கண்ட புகழ் நிலைக்கும்; அதனால் நான் போர் புரிவதை விட்டுப் பின்வாங்க மாட்டேன்' என்றுத் தன் மனதில் உதித்த தயக்கத்தை விட்டு விட்டான்.

இதனால் இராவணன் 'போரிடை மீண்டு ஒருவருக் கும் புறங்கொடாப் போர்வீரன்' என்பது உறுதியாகின் றது. மும்மூர்த்திகளுக்கும் மூலமான பரம்பொருளோ என்று அனுமானிக்கத்தக்க இராமனுக்கே அவன் புறங் கொடுக்க வில்லை யென்றால் மற்ற யாருக்குப் புறங்கொடுத் திருக்க முடியும்?

இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு சந்தேகம் உதிக்க லாம். என்னவெனில் 'இராவணன் யாரிடத்தும் தோல்வி யடைந்தவன் அல்லவென்றால் அவனைக் கார்த்தவீரியார்ச் சுனன் என்பவன் சிறையில் வைத்திருந்தானே? என்பதும், வாலி இவனை வாலில் சுருட்டிப் பிடித்துக் கொண்டு மலை களிலெல்லாம் தாவிக்கொண்டிருந்தானே?' என்பதுமே.

கார்த்தவீரியனிடத்திலும் வாலியிடத்திலும் இராவ ணன் போரில் புறங்கொடுத்துத் தோற்றவனல்ல. கார்த்த வீரியன் காதலிகளோடு ஜலக்கிரீடை செய்து கொண்டிருக் கும்போது இராவணன் தன் காதலிகளோடு ஆகாயத்தில் தேரில் போய்க்கொண்டிருந்தான். அப்போது தன் வாயி லிருந்தத் தம்பலத்தை இராவணன் வெளியே துப்பினான். அது அகஸ்மாத்தாகக் கார்த்தவீரியன் தலையில் விழுந்தது. அவன் உடனே ஆகாயத்தில் தாவி இராவணனைப் பிடித்துச் சிறைப்படுத்தினான்.

வாலி பூசை செய்துகொண்டிருக்கும்போது இரா வணன், அவன் யாரையாவது சீண்டிக்கொண்டே இருக்கும் சுபாவத்தினால் வாலியையும் சீண்டினான். வாலி பூசையி லிருந்தபடியே இராவணனைத் தன் வாலால் சுருட்டிப் பிடித்துக்கொண்டான்; அவ்வளவுதான்.

கார்த்தவீரியனிடத்தும் வாலியினிடத்தும் மன்னிப் புப் பெற்று விடுதலை யடைந்தவன். அவர்களுடன் போர்ப் புரிந்துப் புறங்கொடுத்தவனன்று. அவன் போர் புரியத் தொடங்கிப் போர்க்களத்திலிருந்துப் புறங்கொடுத்ததே யில்லை என்பதுதான் இங்கே சொல்லப்படுவது.

ஆகவே இராமன், போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர்வீரனாகிய இராவணன் தன்னுடன் வெகு திறமையுடன் போர் புரிந்தச் சீரினையே எண்ணி மனம் உவப்ப அவனுடைய உயிரற்ற உடலின் வடிவத்தை யும் அங்கங்களையும் அனுதாபத்தோடு பார்த்தான் என்று சொல்லப்பட்டது.

இதற்கடுத்த இரண்டு செய்யுள்களில் மலைபோற் கிடந்த இராவணனுடைய உடலின்மீது வானரங்கள் ஏறிக் கூத்தாடிக் களிப்பதும் அந்த உடல் கிடந்தத் தோற்றமும் வர்ணிக்கப்படுகின்றன.

இவற்றிற்குப் பின்னுள்ள நான்கு செய்யுள்கள் தாம் மிகவும் முக்கியமானவை. அவற்றிற்குத் தரப்பட் டுள்ள முரணுள்ள உரைகளே நம் சிந்தனையைத் தூண்டி இராமனிடத்தில் காந்தியம் இருப்பதைக் காணச் செய்வன.

அத்தியாயம் 3

போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர்வீரன் பொருது வீழ்ந்த சிரினையே மனமுவப்பப் பார்த்துக்கொண்டிருந்த இராமனுக்கு இராவணன் மீது பச்சாத்தாபம் உண்டாகிப் புன்முறுவல் செய்து பேச லுற்றான்.

"தளிரியல் பொருட்டின் வந்த சீற்றமும் தருக்கினான்தன்
கிளரியல் உருவினோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும்
வளரியல் வடுவிற் செம்மைத்தன்மையும் மருவ நின்ற
முளரியங் கண்ணன் மூரன் முறுவலன் மொழியலுற்றான்."

இந்தச் செய்யுளுக்கு உரையாசிரியர் செய்துள்ள பொருள் என்னவெனில்-:

(இ-ள்) (இராவணனை) அணுகி நின்ற தாமரை மலரைப் போன்ற கண்களையுடைய ஸ்ரீராமன் - தளிர் போன்ற மெல்லிய தன்மையையுடைய சீதா தேவியின் பொருட்டுத் தோன்றிய கோபமும் செருக்கும் கொண்டவனாகிய இராவணனது விளங்குந் தன்மையுள்ள வடிவோடுங் கிழிபட்டுப் போக, விளங்கித் தோன்றுகின்ற வளருந் தன்மையுள்ள தழும்பினாலே (தன் வீரச்செயல்) செம்மை தன்மையுடையதல்லாமையையும் (மனத்துட்கொண்டு). புன்சிரிப்பு வெளித் தோன்றப் பெற்றவனாய் (ப் பின்வருமாறு) கூறலானான் (எ-று)

இது உரைநூலிலுள்ள பொழிப்புரை. (அந்நூலில் பதவுரை இல்லை.) இவ்வுரை குழப்பமுள்ளதாக இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட கருத்தை மனதில் தீர்மானித்துக் கொண்டு அதற்கு இணங்கும்படிச் செய்யப் பதங்களைக் கூட்டியும், பிரித்தும், வருவித்தும் பொருள் செய்யப்பட்

டிருக்கிறது. உதாரணமாக—'தளிரியல் பொருட்டின் வந்த சீற்றமும் தருக்கினான்தன் கிளரியல் உருவினோடும் கிழிப்புற' என்பதற்கு 'தளிர்போன்ற மெல்லிய தன்மையையுடைய சீதா தேவியின் பொருட்டுத் தோன்றிய கோபமும் செருக்குக் கொண்டவனை இராவணனது வடிவோடுங் கிழிபட்டுப் போக' என்று பொருள் சொல்லப்பட்டிருக்கிறது. கோபம் வடிவோடுங் கிழிபட்டுப் போவது எப்படி? கோபம் 'கிழிபட்டது' என்று சொல்வது வலிந்து பொருள் கொள்வதிலும் பொருந்தாது.

மேலும் 'கிளர்ந்து தோன்றும் வளரியல் வடுவிற்—செம்மைத்தன்மையும்' என்ற தொடருக்கு 'விளங்கித் தோன்றுகின்ற வளருந் தன்மையுள்ள தழும்பினாலே (தன் வீரச்செயல்). செம்மையுடைத்தல்லாமையும்' என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

இதில் 'செம்மைத்தன்மையும்' என்ற சொல்லை—'செம்மைத்து+அன்மையும்' என்று பிரித்து அதற்கு ஒரு எழுவாயை வருவித்து, தன்செயல் செம்மைத்து அல்லாமையும்' என்று கொள்ளவேண்டுமென்று விளக்கப்படுகிறது. 'வளரியல் வடுவில்' என்பதற்கு 'வளருந் தன்மையுள்ள தழும்பினாலே' என்று பொருள் தரப்பட்டுள்ளது. புண் வளரலாம், தழும்பு எப்படி வளரும்?

இந்த உரைக்குத் தரப்பட்டுள்ள விளக்கம் என்னவெனில் :

'தருக்கினான் உருவினொடு சீற்றம் கிழிப்புற' என்றது—இராவணனுருவம் இராமபாணத்தால் துண்டிக்கப்பட்டதனால் அப்பிரானது சீற்றம் நீங்குவதாயிற்று-என்றவாறு. உடனவிற்சியணி. 'செம்மைத்து' என்றதற்கு 'தன்செயல்' என்ற தோன்றா எழுவாய் வருவிக்க, தன் வீரச்செயல் வெளிநோக்கிற்குச் செம்மையுடையது போலத் தோன்றினும், பகைவன் முதுகின் தழும்பைக் காணுமிடத்துச்

செம்மையுடையதல்லாமையும் கொண்டுளதென்பார். 'செம்மைத்தன்மையும்' என்றார். சீற்றமும்-உம்மை-உயர்வு சிறப்பு–இது விளக்கம்.

இந்த விளக்கத்தில் 'பகைவன் முதுகின் தழும்பைக் காணுமிடத்து' என்பது குறித்துக்கொள்ளத் தக்கது. பின்வரும் செய்யுள்களுக்குப் பிழையான உரைகள் செய்ய நேர்ந்தது இந்தத் தழும்பினால்தான்.

இனி இந்தச் செய்யுளில் உள்ள பதங்களுக்கு நேரான பொருளையும் கருத்தையும் ஆராய்வோம்.

இராவணன் கொடிய அரக்கனென்றாலும், காமத் தீமையால் சீதாதேவியைச் சிறைவைத்த பாதகத்தைச் செய்தவனென்றாலும் அவனுக்கும் பல சிறப்புக்கள் உண்டு. பெருந் தவங்கள் செய்து பல அரிய வரங்களைப் பெற்றுள்ள பெருமை, தேவர்களெல்லாம் அடிபணிந்து ஏவல் புரியும் ஏற்றம், கைலாய மலையை அசைத்துவிட்ட ஆற்றல், வேதங்களை யெல்லாம் படித்திருந்த கல்வி, வீணை மீட்டலில் மிகச் சிறந்த கலைத்திறம், விரும்பத் தகுந்த அழகான உருவம், போரிடைப் புறங்கொடுக்காத வீரம் முதலிய பல சிறப்புக்களுடையவன்.

அப்படிப்பட்ட அவன் பிரம்மாஸ்திரத்தால் மார்பு கிழிப்புண்டு இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்ட இராமனுக்கு அவன்மீது இரக்கம் உண்டாகிப் புன்முறுவல் செய்து அனுதாபத்தை வெளியிடுகிறான் என்பதைத் தான் இந்தச் செய்யுள் கூறுகின்றது. செய்யுளை மீண்டும் படித்து அதற்குக் கம்பன் கருதிய பொருளைக் காண்போம்.

"தளிரியல் பொருட்டின் வந்த சீற்றமும் தருக்கினோன்தன்
கிளரியல் உருவினோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும்
வளரியல் வடுவிற் செம்மைத்தன்மையும் மருவ நின்ற
முளரியங் கண்ணன் மூரன் முறுவலன் மொழியலுற்றான்."

தளிரியல் பொருட்டின் வந்த சீற்றமும்=தளிர் போன்ற மென்மையுடைய சீதையை அபகரித்துச் சிறை வைத்ததால் அவன் மீது கொண்ட கோபமும், தருக்கினோன்தன்= அகங்காரியான அவனுடைய, கிளரியல் உருவினோடும் கிழிப்புறக் கிளர்ந்து தோன்றும்=கண்டவர்கள் கிளர்ச்சி கொள்ளத்தக்க அவனுடைய வடிவமைந்த உருவத்தையும் அந்த உருவம் கிழிப்புண்டு அதில் எடுப்பாகக் காணப் படுகிற, வளரியல் வடுவில்=இரத்தப் பெருக்கால் விரி வடையும் தன்மையுள்ளக் கிழிசல் புண்ணையும் பார்த்ததனால் உண்டான, செம்மைத் தன்மையும் மருவ நின்ற, முளரியங் கண்ணன் = அமைதியும் கலந்த மனத்தோடு (இராவணனைப் பார்த்துக்கொண்டு) நின்ற அழகிய தாமரை போன்ற கண்களையுடைய இராமன், மூரல் முறுவலன் மொழியலுற்றான் =பற்கள் தோன்றப் புன்சிரிப்புடன் சொல்லலுற்றான்.

அதாவது, சீதையை அபகரித்துச் சிறைவைத்ததற்காக அவன்மீது கொண்டிருந்த கோபமும் இப்போது அவனுடைய உடல் கிழிபட்டுக் கிடப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றதனால் உண்டான கோபமற்ற அமைதியும் கலந்த நிலையில் புன்சிரிப்புடன் புகலலுற்றான் - என்பது பொருள்.

'சீற்றமும் செம்மைத்தன்மையும் மருவ நின்ற முளரியங் கண்ணன் மூரன் முறுவலன் மொழியலுற்றான்' என்று கூட்டவேண்டும்.

'செம்மைத்தன்மை' என்பது மனக்கோட்டமில்லாமை; விருப்பு வெறுப்பு இல்லாத நிலை.

சீற்றத்தை மருவிய செம்மைத்தன்மை, மன அமைதியை உண்டாக்கி இராமனுடைய சிந்தனையைத் தூண்டுகிறது. அந்தச் சிந்தனையினால், போர் வீரனாக இராமன் மேற்கொண்டிருந்த ராஜஸ குணம் மறைந்து சாத்விகம்

நிறைகின்றது. அதனால், தான் இராவணனைக் கொன்றது தன்னுடைய பெருமைக்குக் குறைவான காரியம் என்று வருந்துகிறான். அப்படி வருந்தித் தன்னைத்தானே நிந்தித்துக்கொள்வதைப் பின்வரும் செய்யுள் கூறுகின்றது

"வென்றியா னுலகமூன்று மெய்ம்மையான் மேவினாலும்
பொன்றினா னென்று தோளைப் பொதுவற நோக்கும்பொற்பும்
குன்றியா சுற்றதன்றே யிவனெதிர் குறித்த போரிற்
பின்றியான் முதுகிற்பட்ட பிழம்புள தழும்பினம்மா."

இந்தச் செய்யுளுக்கு உரைநூலிலுள்ள பொருளைப் பாருங்கள் :

(இ-ள்) (சுவர்க்கம், மத்தியம், பாதாளம் என்ற) மூன்றுலகங்களையும் உண்மையில் வெல்லுஞ் செயலோடு பொருந்தினாலும், (இவ்விராவணன்) இறந்துபட்டானென்ற காரணத்தினால் (என்) தோள்வலியைப் பற்றிப் பொதுவற நோக்கக்கூடிய அழகு, இவ்விராவணன் எதிராகக் குறித்துச் செய்த போரிற் பின்னிட்டவனாய் (அதனால்) முதுகிற்பட்ட தழும்பாக உள்ள பிழம்பினால் குன்றிக் குற்றம் பொருந்தியதாகுமன்றோ? (எ-று)

இது உரையிலுள்ள பொழிப்புரை. இதற்கு விளக்கமாக :—

மூவுலகையும் வென்றிட்ட இராவணனை வென்றதனால் என் தோள்வலிமை பொதுவறப் பாராட்டற்குரியதென்று தோன்றலாம்; ஆயினும் இப்போது இராவணன் முதுகில் தழும்பு காணப்படுவதனால், 'இராமன், பகைவர்க்கு அஞ்சி முதுகுகொடுத்தோடியவனை வென்றான்' என்று பரிகசித்தற்கு இடனாகி என் தோள்வலிக்குப் பழிப்பு உண்டாகுமே தவிர மேன்மையுண்டாகாது என ஸ்ரீராமன் கூறுகின்றனனென்க. போரிற் புறங்காட்டுதல் போலவே புறங்காட்டியோடியவனை வெல்வதும் புகழ்ச்சிக்குக் காரணமாகாது. பழிக்கே காரணமாம் என்க. —இது விளக்க உரை.

இந்த உரையும் அதன் விளக்கமும் மிகவும் தவறானவை என்பதை எளிதிற் காணலாம். இராவணன் எப்போதோ யாருக்கோ போரில் அஞ்சிப் புறமுதுகுகாட்டி ஓடினவன் என்றும் அப்படி ஓடியபோது எதிரியின் பாணம் முதுகிற்பட்டு உண்டாக்கிய புண்ணின் தழும்பு முதுகிற் காணப்படுகிறதென்றும், அதனால் புறங்கொடுத்து ஓடி முதுகில் அடிவாங்கிய ஒருவனை வென்றது பழிப்புக்கு இடமாகுமேயன்றி மேன்மையுண்டாக்காது—என்றும் இராமன் கூறியதாகக் காட்டப்படுகிறது. இராவணன் போரிற் புறங்கொடுத்தவனா?

அப்படியானால்,

போரிடைமீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப்
போர்வீரன்பொருது வீழ்ந்த
சீரினையே மனமுவப்ப உருமுற்றும் திருவாளன்
தெரியக்கண்டான்.

என்று சொன்னது என்னவாயிற்று? அந்தப் பாடலுக்கு உரையாசிரியர் சரியான உரையே செய்திருக்கிறார். மேலுள்ள இரண்டு அடிகளுக்கும் அவர் செய்துள்ள உரை :—'இதுவரையில் போரிலே மீண்டு ஒருவர்க்குப் புறங்கொடாப் போர்வீரனாகிய இராவணன் பொருது வீழ்ந்துள்ள சிறந்த நிலையையே தன் மனமுவக்கும்படி அவன உருவம் முற்றும் திருமகள் கணவனாகிய ஸ்ரீராமன் கண்ணுக்குத் தெரியக்கண்டான்'—என்பது.

அந்தப் பாடலுக்கு அப்படி உரைகண்ட ஆசிரியர் பின்னுள்ள பாடல்களில் அதற்கு முற்றிலும் முரணாக, உரை செய்துவிட்டது ஏனோ!

நிற்க இறந்துகிடந்த இராவணனுடைய உருவத்தைப் பார்த்த பிறகுதான் அவன் போரில் புறங்கொடுத்து ஓடி முதுகில் அடிவாங்கியவன் என்பதை இராமன் கண்டுகொண்டான் என்பது இராமனுடைய அறிவுக்கு இழுக்கை

உண்டாக்குகிறது. உயிரற்றுக் கிடந்த இராவணனைப் பார்ப்பதற்கு முன்னால் இராவணனுடைய ஆற்றலையோ, சரித்திரத்தையோ ஒரு சிறிதும் அறியாதவனாகி விடுகிறான் இராமன். இராவணன் ஒருவருக்கும் புறங்கொடாப் போர் வீரன் என்பதை நன்றாக அறிந்திருந்ததனால் தான் 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர்வீரன் பொருது வீழ்ந்த சீரினையே (எண்ணி) மனமுவப்ப, இராமன் அவனுடைய உரு முற்றும் நன்றாகப் பார்த்தது.

ஆகையால் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிபட்ட இராவணனைக் கொன்றது தனக்குப் பெருமை தரக்கூடியதல்ல என்று இராமன் சொன்னான் என்று பொருள் கொண்டது முற்றிலும் தவறு.

பின் அந்தச் செய்யுளின் பொருள் என்னவென்பதைப் பார்ப்போம்:

> **வென்றியா னுலகமூன்று மெய்ம்மையான் மேவினாலும்**
> **பொன்றினா னென்று தோளைப்பொதுவற நோக்கும் பொற்பும்**
> **குன்றியா சுற்றதன்றே யிவனெதிர் குறித்தபோரிற்**
> **பின்றியான் முதுகிற்பட்ட பிழம்புள தழும்பினம்மா.**

வென்றியான் உலகம் மூன்றும் மெய்ம்மையான் மேவினாலும்=இராவணனை வென்றுவிட்டதனால் அவன் ஆதிக்கம் செலுத்திய (சொர்க்கம், மத்தியம், பாதாளம் ஆகிய) மூன்றுலகங்களையும் நாம் அடைந்துவிட்டோம் என்பது உண்மையானாலும், பொன்றினான் என்று=இராவணன் இறந்துவிட்டான் என்று, தோளைப் பொதுவற நோக்கும் பொற்பும்=என்னுடைய தோளை அசாதாரண (செயல் சாதித்துவிட்டதாக) மதித்துப் பெருமையடையக் கூடிய சிறப்பும், குன்றி ஆசுற்றது அன்றே இவன் எதிர் குறித்த போரில்=இவனோடு நடத்திய போரில் குறுகிக் குற்றமுள்ளதாகிவிட்டது, பின்றியான் முதுகிற் பட்ட

பிழம்புள தழும்பின்=பின்னடைந்து நான் என் முதுகில் அடிவாங்கித் தழும்புண்டாக்கிக் கொண்டதுபோல்.

அதாவது: இவனை வென்றுவிட்டதில் இவன் ஆண்ட மூன்று உலகத்தையும் நாம் அடைந்துவிட்டோம் என்பது மெய்தான். ஆனால் இவனை நான் கொன்றுவிட்டதில் என்னுடை அசாதாரண தனிப் பெருமை குறைந்து மாசடைந்துவிட்டது. அதனால் நான் என் தோளாற்றலை மெச்சி மகிழ்வடைவதற்கில்லை. மகிழ்வதற்கு மாறாக இவனைக் கொன்றுவிட்டதில் நான் என்னுடைய இயல்பான குணத்தைவிட்டுப் பின்னடைந்து விட்டதால் போரில் பின்னடைந்து முதுகில் அடிவாங்கிவிட்டது போல் நாணமடைகின்றேன் என்பது கருத்து.

பொதுவற=அசாதாரணமாக. ஆசுற்றதன்றே என்பதிலுள்ள 'அன்றே' அசை. அம்மா-வியப்புக் குறி.

இராமன் இராவணனைக் கொன்றுவிட்டதற்கு வருந்தி நாணமடைகிறான். ஏன், நாணம் அடைகிறான் என்பதை அடுத்த செய்யுள் விளக்குகின்றது. அடுத்த செய்யுள்:

> **கார்த்தவீ ரியனென் பானாற் கட்டுண்டா னென்னக்கற்கும்**
> **வார்த்தையுண் டதனைக்கேட்டு நாணுறும் மனத்தினேற்குப்**
> **போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்**
> **நேர்த்ததும் காணலுற்ற விசனுரிருக்கைநிற்க.**

இந்தச் செய்யுளுக்கு உரை நூலிலுள்ள பொருளைப் பாருங்கள்.

(இ-ள்) கார்த்தவீரியார்ச்சுனனென்பானால் (இராவணன்) கட்டுண்டான் என்று சொல்லப்பட்ட வார்த்தையுண்டு; (இவ்வுலகிற் கேட்கப்படும்) அதனைக் கேட்டதனாலேயே நாணங்கொண்ட மனத்தினையுடைய எனக்கு, (இவ்விராவணன்) போரிலே முதுகு காட்டியதனால் தோன்றிய புண்ணினுடைய தழும்பும் நேராகக் காணப்

பட்டது! சிவபெருமானுடைய இருப்பிடமாகிய கைலாசம் நிற்கட்டும். (எ-று.)

இது உரைநூலிலுள்ள பொழிப்புரை. இதற்கு விளக்கமாக உரைநூலில் சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால் :—

'இராவணனென்பவன் முன்னமே கார்த்தவீரியனால் வெல்லப்பெற்றுக் கட்டுப்பட்டுள்ளானாதலால், அவனை வென்றதைப் பற்றி ஏற்கெனவே நாணங்கொண்டு நின்ற எனக்கு, அந்த என் நாணத்தை மிகுவிக்குமாறு முதுகில் தழும்பும் காண நேர்ந்ததே! இதனை நினைக்க என் நாணம் மிகுகின்றது' என்றனனென்பதாம். 'ஈசனாரிருக்கை நிற்க' என்றது—இவன் கைலாயத்தின் கீழ் கைந்நசுக்குண்டு நடுங்கியவனாதலாலும் இவனை வென்றதில் சிறப்பில்லையென்பது பெறப்படும். ஆயினும், அது குறித்துத் தெய்வமலையென்று ஒரு போக்குச் சொல்லலாகாதலால், அதனை இங்கு கூறாது விலக்கினேன் என்ற கருத்தைத் தெரிவிக்கும்.

இது விளக்கம். உரை முரணும் குழப்பமும் உள்ளதாக இருக்கிறது. விளக்கமோ முரணையும் குழப்பத்தையும் அதிகப்படுத்துவதாக இருக்கிறது. மீண்டும் இங்கே இராவணன் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிவாங்கிய தழும்பு இருப்பதை நேராகப் பார்த்ததாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சொல்வது 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங்கொடாப் போர்வீரன்' என்றதற்கு முரணானது என்பதை முன்பே எடுத்துக் காட்டப்பட்டது. அது நிற்க, இந்த விளக்க உரையில் 'இராவணன் என்பவன் முன்பே கார்த்தவீரியனால் வெல்லப்பெற்றுக் கட்டுப்பட்டுள்ளானாதலால், அவனை வென்றதைப் பற்றி ஏற்கெனவே நாணங்கொண்டு நின்ற எனக்கு, அந்த என் நாணத்தை மிகுவிக்குமாறு முதுகிற்றழும்பும் காண நேர்ந்ததே! இதனை நினைக்க என் நாணம் மிகுகின்றது' என்று சொல்லப்படுகிறது.

இதில் 'கார்த்தவீரியனால் முன்பே வெல்லப்பட்ட இவனை வென்றதைப் பற்றி ஏற்கெனவே நாணங்கொண்டு நின்றஎனக்கு' என்றதைப் பாருங்கள். இது இராவணன் உயிரிழந்து கீழே விழுந்துகிடக்கும்போது அவனுடைய உருவத்தைப் பார்த்துக்கொண்டு நின்ற இராமன் சொல்லுவது.

'இவனை வென்றதைப்பற்றி ஏற்கெனவே நாணங்கொண்டு நின்ற' என்றால் கார்த்தவீரியனால் இராவணன் கட்டுண்ட வார்த்தையை இராமன் கேள்விப்பட்டது இராவணனைக் கொன்ற பிற்பாடா? இராவணனுடைய உருவத்தைப் பார்க்கத் தேரைக் கீழே இறக்கும்படி மாதலிக்கு உத்தரவிட்டுத் தேரைவிட்டுக் கீழே இறங்கி இராவணனுடைய உருவத்தை அணுகுவதற்கு முன்னால்தான் இராவணன் கார்த்தவீரியனால் கட்டுண்டவன் என்பதைக் கேள்விப்பட்டானா?

இல்லை, இராமன் இராவணனைப் பற்றிய எல்லா விவரங்களையும் இலங்கைக்குள் புகுவதற்கு முன்னாலேயே அறிந்துகொண்டவன்.

இராவணன் கார்த்தவீரியனால் கட்டுண்டவன் என்பது இராவணனுடன் போர் தொடுப்பதற்கு முன்னாலேயே இராமன் அறிந்திருந்த செய்திதான். கார்த்தவீரியனால் கட்டுண்ட இராவணனை வெல்வது நாணத்தகுந்த செயல் என்று இராமன் கருதக் கூடியவனானால் இராவணன் மீது இராமன் போரே தொடுத்திருக்கமாட்டானே!

மேலும் இந்தச் செய்யுளின் கடைசி அடியான 'நேர்ந்ததுங் காணலுற்ற ஈசனார் இருக்கை நிற்க' என்பதற்கு 'இவன் கைலாயத்தின் கீழ் கைந்நசுக்குண்டு நடுங்கியவனாதலாலும் இவனை வென்றதிற் சிறப்பில்லை என்பது பெறப்படும். ஆயினும் அது குறித்துத் தெய்வமலை யென்று ஒரு போக்குச் சொல்லலாமாதலால் அதனை இங்கு கூறாது விலக்

கினேன் என்ற கருத்தைத் தெரிவிக்கும்' என்ற விளக்கம் தரப்பட்டுள்ளது. இது பொருளற்றது. கைலாய மலையில் கைநகசுக்குண்டு நடுங்கியதும் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிபட்டுத் தழும்புடையவனாக இருப்பதைப் போன்றதுதானா?

போரில் புறங்கொடுத்து முதுகில் தழும்புள்ளவனாகவே இருந்தாலுங்கூட, மக்களுக்குத் துன்பம் செய்பவனும், தன் மனைவியை அபகரித்துச் சிறையில் வைத்து, அவளை விட்டு விடும்படி விபீஷணன், மாலியவான், கும்பகர்ணன், இந்திர சித்து முதலான அவனுடைய உறவினர்களே வற்புறுத்திச் சொல்லியும் சீதையை விட்டுவிட மறுத்தவனும், இராமனே தூதனுப்பிக் கேட்டும், சமாதானத்துக்கு வர மறுத்துப், போரிடவே விரும்பிய பகைவனுமான இராவணனை வென்ற தற்கு இராமன் நாணமடைய நியாயமில்லையே!

அப்படியும் இராவணன் போரிற் புறங்கொடுத்தவ னல்லன். போரைப் பொறுத்தமட்டில் அவன் வியக்கத் தக்க வீரன். சீதை தன்னுடைய இச்சைக்கு இணங்கக் கூடியவள் அல்ல வென்பதை நிச்சயமாகக் கண்டுகொண்ட பின்னும், அவளை விடுதலை செய்து இராமனிடத்தில் மன்னிப்புக் கேட்டுத் தலைகுனியக் கூடாதென்ற ஒரே காரணத்துக்காகத் தான் இறந்தாலும் சரி என்று போரிடத் துணிந்தான்.

இராவணன், சீதையை விட்டுவிட்டு இராமனுக்குப் பணிந்தவனாகித் தன் பெருமை குறைந்துவிடக் கூடாது என்பதான தன்மானத்திற்காகத்தான் போர்புரிந்தான் என்பது அவனுக்கும் இந்திரசித்துக்கும் நடந்த பேச்சில் நன்றாகத் தெரிகிறது. அதைக் காண இங்கே அந்த பேச்சைப்பற்றிய சில செய்யுள்களைக் காட்டுவது பொருந்தும்.

இலக்குவனுடன் நெடுநேரம் போர்புரிந்த இந்திரசித்து தன்னிடத்திலுள்ள எந்த ஆயுதத்தாலும் இலக்குவனை

வெல்ல முடியாதெனக் கண்டுகொண்டான். இனித் தனக் குள்ள கடைசி வரமாகிய நிகும்பிலை யாகத்தைச் செய்து அதினின்றும் அடையக்கூடிய, யாராலும் அழிக்க முடியாத இரதத்தின்மீது இருந்து போர்புரிந்தால்தான் இலக்குவனை வெல்ல முடியும் என்று தீர்மானித்து, யுத்தகளத்திலிருந்து மறைந்து நிகும்பிலை யாகம் செய்யப் போய்விட்டான். அந்த யாகத்தை அவன் செய்து முடித்துவிட்டால் அவனை வெல்ல முடியாது என்ற உண்மையை அறிந்திருந்த விபீடணன் இராமனுக்கு உளவுசொல்லி, அந்த யாகத்தை அழிக்க இலக்குவனையும் அனுமனையும் தன்னுடன் அனுப்பச் சொல்லுகிறான். அதன்படியே இராமன் அனுப்ப, இவர்கள் போய் அந்த யாகத்தை அழித்துவிடுகின்றனர்.

வேறு வழியின்றி இந்திரசித்து மீண்டும் இலக்குவ னுடன் போர் புரிகின்றான். தனக்கு வரத்தால் கிடைத்த நாராயண அஸ்திரம் என்னும் மிக்க வலிமையுள்ள பாண மும் தன் எதிரியாகிய இலக்குவன் மீது பாயாமல் அவனை வணங்குவதுபோல் வலமாகப் பிரதட்சணம் செய்துவிட்டுப் போவதைக் கண்டான் இந்திரசித்து. அதைக் கண்டவுடன் இலக்குவனை வெல்லமுடியாது என்று தெரிந்து கொண் டான். சிந்திக்கலானான்: 'இலக்குவனையே வெல்ல முடியா தென்றால் அந்த இராமனை எப்படி வெல்ல முடியும்? போரைத் தொடர்ந்தால் தானும் தன் தந்தையும் இலங்கை யிலுள்ள எல்லாரும் அழிந்துபோக வேண்டியதுதான்.' அதனால் உடனே தன் தந்தையிடம் சென்று சீதையை விடுதலை செய்து இராமனுடன் சமாதானம் செய்துகொள் ளும்படிக் கேட்டுக்கொள்ளத் தீர்மானித்தான். உடனே யுத்த களத்தைவிட்டு நேராகத் தன்னுடைய தந்தையிடம் சென்றான்.

உடம்பு முழுதும் அம்புகள் பாய்ந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த கோலத்தோடு வந்து நின்ற மகனைப் பார்த்து, இராவணன்:

"தொடங்கிய வேள்வி முற்றப்
　　　பெற்றிலாத் தொழில் நின்தோள்மேல்
அடங்கிய அம்பே என்னை
　　　அறிவித்தது அழிவில் யாக்கை
நடுங்கினை போலச் சாலத்
　　　தளர்ந்தனை கலுழன் நண்ணப்
படங்குறை அரவம் ஒத்தாய்
　　　உற்றது பகர்தி என்றான்."

நீ தொடங்கிய நிகும்பிலை யாகம் நடந்தேறவில்லை என்பதை உன் தோள்மீது பாய்ந்துள்ள அம்பே எனக்குத் தெரிவிக்கிறது. உடல் அழிந்து போகுமே என்ற அச்சத்தால் நடுங்கி விட்டாய் போல மிகவும் மனம் தளர்ந்திருக்கிறாய். கருடன் அருகில் வரக்கண்ட நாகத்தைப்போல் காணப்படுகிறாய். நடந்தது என்ன? சொல்லுக என்றான்.

இந்திரசித்து சொல்லுகிறான் :—

சூழ்வினை மாயமெல்லாம் உம்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியால் எழுந்து வீங்கி
ஆள்வினை ஆற்றல் தன்னால் அமர்த்தொழில் தொடங்கி யார்க்கும்
தாழ்விலா சரங்கள் மூன்றும் தொடுத்தனென் தடுத்துவிட்டான்.

நான் திட்டமிட்டு முயன்ற யாகத்தையும் அதன் இரகசியத்தையும் உங்கள் தம்பி விபீடணனே (உளவு சொல்லியதால், இலக்குவன் யாகசாலையைச்) சூழ்ந்து போரிட்டு அழித்து விட்டான். அதன் பிறகு நான் வீராவேசத்துடன் போர் தொடங்கி, என்னுடைய சிறந்த அஸ்திரங்களான (பிரமாஸ்திரம், பாசுபதாஸ்திரம், நாராயணாஸ்திரம்) ஆகிய மூன்று படைகளையும் பிரயோகித்தேன். அவற்றை இலக்குவன் தடுத்து விட்டான்.

அது மட்டுமா! என்னுடைய அஸ்திரம் எனக்கே சதி செய்ததைப் பாருங்கள்!

"நிலம்செய்து விசும்பும் செய்த நெடியவன் படைநின்றானை
வலம்செய்து போயிற்றென்றால் மற்றினி வலியதுண்டோ?
குலம்செய்த பாவத்தாலே கொடும்பகை தேடிக்கொண்டோம்
சலம்செயின் உலகம்மூன்றும் இலக்குவன் முடிப்பன்தானே."

(மூன்றடி மண்கேட்டு இரண்டே அடிகளில்) பூமியையும் ஆகாசத்தையும் அளந்து விட்டவனான நாராயணன் எனக்கு வரமாகக் கொடுத்த நாராயணாஸ்திரம், எனக்குப் பகைவனாக எதிர்த்து நின்ற இலக்குவனை வணங்கி அவனைப் பிரதட்சணம் செய்துவிட்டுப் போய்விட்டதென்றால், அதை விடப் பலமுள்ள ஆயுதம் என்ன இருக்கிறது? (ஆகையினால் நமக்கு வந்திருக்கிற பகைவர்கள் இலேசானவர்களல்ல) நம்முடைய குலத்தவர்கள் செய்துள்ள பாவங்களின் பயனாக மிகக் கொடிய பகையைத் தேடிக்கொண்டு விட்டோம். (நாம் இந்தப் பகைவர்களை வெல்லவே முடியாது.) கோபத்தோடு போர் புரியத் தொடங்கினால் இந்த இலக்குவன் ஒருவனே மூன்று உலகங்களையும் வென்று முடிப்பான். (அப்படியிருக்க நாம் அந்த இராமனை எப்படி வெல்ல முடியும்?)

ஆகையினால் தந்தையே! நான் சொல்லுவதை அருள் கூர்ந்து கேளுங்கள் :

"ஆதலால் அஞ்சினேன் என்றருளலை ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாயின் அனையவர் சீற்றந் தீர்வர்
போதலும் புரிவர் செய்ததீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம் கலக்கி
　　　　　　　　　　　　　　[வென்றான்."

ஆதலால் நான் பயந்துவிட்டேன் என்று எண்ண வேண்டாம். நீங்கள் அந்தச் சீதையின் மீது கொண்டுள்ள ஆசையை மட்டும் விட்டுவிட்டாற் போதும். அவர்களுடைய கோபம் நீங்கிவிடும். நீங்கள் செய்த குற்றத்தையும் மன்னித்து விட்டு அவர்கள் போய்விடுவார்கள். (இப்படி நான்

சொல்லுவது என் உயிரின்மீதுள்ள ஆசையால் அன்று) உங்கள் மீது எனக்குள்ள பாசத்தால் சொல்லுகின்றேன். (சீதையை விடாவிட்டால் நீங்கள் அழிந்து போவீர்களே என்ற பாசத்தால்தான் சொல்லுகிறேன்) என்றான், மூன்று உலகங்களையும் கலக்கி வெற்றி கண்டவனாகிய இந்திரசித்து.

இப்படி இந்திரசித்து சொன்னதைக் கேட்ட இராவணன் என்ன சொல்லுகிறான் என்பதைப் பாருங்கள் :

“ இயம்பலும் இலங்கைவேந்தன் எயிற்றிள நிலவுதோன்றப்
புயங்களும் குலுங்கநக்குப் போர்க்கினி ஒழிதிபோலாம்
மயங்கினை மனிதன் தன்னை அஞ்சலை வருந்தல் ஐய
சயங்கொடு தருவென் இன்றே மனிதரைத் தனுஒன்றாலே.”

இந்திரசித்து இப்படிச் சொன்னவுடனே, இலங்கை வேந்தனாகிய இராவணன் அவனுடைய பற்களின் ஒளி வீசும்படியாக இருபது புயங்களும் குலுங்கச் சிரித்துவிட்டு ‘மகனே! இனிமேல் நீ போருக்குத் தகுதியற்றவனாகிவிட்டாய் எனத் தெரிகிறது. மனிதர்களாகிய இராமனையும் இலக்குவனையும் தெய்வங்களாக மயங்கிவிட்டாய். அஞ்சவேண்டாம், எனக்காக நீ வருத்தப்படவும் வேண்டாம். இன்றைக்கே நான் தனியனாகச் சென்று என்னுடைய ஒரே வில்லால் இந்த மனிதர்களை வென்று ஜயம் கொண்டு வருகிறேன்.

“ முன்னையோர் இறந்தோரெல்லாம் இப்பகை முடிப்பரென்றும்
பின்னையோர் நின்றோரெல்லாம் வென்றனர் பெயர்வரென்றும்
உன்னை நீ அவரை வென்று தருதியென்று உணர்ந்தும் அன்றால்
என்னையே நோக்கிநான் இந்நெடும்பகை தேடிக்கொண்
[டேன்.’

இதுவரைக்கும் இந்தப் போரில் இறந்துபோனவர்களெல்லாம் இந்தப் பகைவரை வென்று முடிப்பர் என்றோ, அல்லது இன்னும் இருக்கின்ற போர்வீரர்களெல்லாம் வென்று வருவார்களென்றோ, அல்லது (உன்னை) நீ அவர்

களை வென்று எனக்குப் பெருமையுண்டாக்குவாய் என்றோ நம்பி நான் இந்தப் போரில் இறங்கவில்லை. என்னுடைய ஆற்றல் ஒன்றையே நம்பி இந்தப் பெரும் பகைவரை தேடிக் கொண்டேன்.

“ பேதைமை உரைத்தாய் மைந்த உலகெலாம் பெயரப்பேராக்
காதைஎன் புகழினோடு நிலைபெற அமரர் காண
மீதெழும் மொக்குள் அன்ன யாக்கையை விடுவதல்லால்
சீதையை விடுவதுண்டோ இருபது திண்தோளுண்டாய்.”

மகனே! நீ சொன்னது அறிவில்லாத யோசனை. உலகமெல்லாம் அழிந்த காலத்திலும் அழியாமல் என் வரலாறு நிலைத்திருக்கும்படி தேவர்கள் கண்டு வியக்கும்படி நீர்மேற் குமிழி போன்ற நிலையற்றதான இந்த உடலை விடுவேனேயல்லாமல் சீதையை விடுவதுண்டோ—வலிமை மிகுந்த இருபது தோள்களிருக்கும்போது! மேலும்,

“வென்றிலென் என்றபோதும் வேதமுள்ளளவும் யானும்
நின்றுளென் அன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்குமாயின்
பொன்றுதல் ஒருகாலத்தும் தவிருமோ பொதுமைத்தன்றோ
இன்றுளார் நாளைமாள்வார் புகழுக்கும் இறுதி உண்டோ?”

நான் வெற்றியடையாமல் இறந்து போனாலும் என்னுடைய (இராவணன் இராமனுக்குப் பணிய மறுத்து வீர மரணம் அடைந்தான் என்ற) புகழ் வேதங்கள் உள்ளளவும் நிலைத்திருக்குமல்லவா? மற்றும் நான் வெற்றியடைந்து அந்த இராமன் இறந்து அவனுடைய புகழ் நிலைக்கும் என்றாலும் (நானும் ஒருநாள் மரணமடைய வேண்டுமானதால்) மரணத்தை எக்காலத்திலும் தவிர்க்கமுடியாது. மரணம் எல்லா உயிர்களுக்கும் பொதுவானதல்லவா? இன்றைக்கு உயிரோடிருப்பவன் நாளைக்கு இறந்து போவான். ஆனால் புகழுக்கு மரணம் உண்டோ? (இல்லை.)

“விட்டனன் சீதைதன்னை என்றலும் விண்ணோர் நண்ணிக்
கட்டுவதல்லால் என்னை யானெனக் கருதுவாரோ

பட்டனன் என்றபோதும் எளிமையிற் படுகிலேன் யான்
எட்டினேடு இரண்டுமான திசைகளை யெறிந்து வென்றேன்''

'இராவணன் சீதையை விட்டுவிட்டான்' என்றதைக் கேள்விப்பட்டவுடன் (எனக்கு அஞ்சி நடுங்கி ஓடுகின்ற) தேவர்களெல்லாம் என்னைக் கட்டிப்போட்டு ஏளனம் செய்வார்களேயல்லாமல் என்னைப் பழைய இராவணன் என்று மதிப்பார்களா? நான் இறந்து போவதென்றாலும், பத்து திக்குகளையும் கலக்கி அங்கங்கே உள்ள அனைவரையும் வென்றவனாகிய நான் இலேசில் இறந்து விடுவேனா?

கடைசியாக:

"சொல்லினன் பலவும் நீநின் இருக்கையைத் தொடர்ந்து
தோவில்
புல்லிய பகழி வாங்கிப் போர்த்தொழில் சிரமம் போக்கி
எல்லியும் கழித்தி என்று எழுந்தனன் எழுந்து பேழ்வாய்
வல்லியம் முனிந்தால் அன்னுன் வருக தேர் தருக என்ருன்."

(நீயோ போர்புரிய அஞ்சிவிட்டாய். உனக்கு) எவ்வளவு சொன்னாலும் என்ன பயன்? நீ உன் மனைக்குச் சென்று உன் தோள்களில் குத்திக்கொண்டிருக்கும் அம்புகளை நீக்கிப் போர் செய்த சிரமத்துக்குப் பரிகாரம் செய்துகொண்டு தூங்கி இரவைக் கழிப்பாயாக' என்று சொல்லிவிட்டு இராவணன் அரியாசனத்தினின்று எழுந்தான். எழுந்து, கோபங் கொண்ட புலி வாயைப் பிளந்துகொண்டு உறுமுவதைப்போல் 'யாரடா அங்கே! போய் என்னுடைய தேரைக் கொண்டுவா. (நான் போகிறேன் போர்முனைக்கு)' என்ருன்.

இதனால் 'இராவணன் போருக்குப் பின்வாங்கிச் சீதையை விடுதலை செய்து இராமனுக்குப் பணிந்துவிட்டான்' என்ற அபகீர்த்தி வரக்கூடாது என்றும் 'இராமன் பரம்பொருளோ' என்ற மதிப்புத் தோன்றியும் கூட அதற்காக அஞ்சாமல் போர் புரிந்து, வீர மரணம்

அடைந்தான் என்ற புகழ் நிலைக்க வேண்டும் என்பதற்காகவே சீதையை விட்டுவிட மறுத்தான் என்றும் விளங்குகின்றது. தன்னுடைய வல்லமைகளைப் பற்றி அளவு கடந்த நம்பிக்கையினலோ அல்லது அகங்காரத்தாலோ அவன் போரில் பின்வாங்கக்கூடாது என்ற ஒன்றைத்தான் கருதினனே தவிர வெற்றி தோல்விகளைப் பற்றி அவன் ஆலோசிக்கவில்லை, அஞ்சவுமில்லை.

அப்படிப்பட்ட இராவணனை அவன் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிவாங்கிய தழும்புள்ளவன் என்று கம்பன் கருதியிருப்பானு? கார்த்தவீரியனுல் கட்டுண்டவன் என்பதற்காகவும், கைலாய மலையின்கீழ் நசுக்குண்டவன் என்பதற்காகவும் அவனை வென்றது நாணப்பட வேண்டிய காரியமாகுமா? கார்த்த வீரியனேடு அவன் போர் புரியவில்லை.

இனி அந்தச் செய்யுளில் கம்பன் கருதிய பொருளை நாடுவோம்:

"கார்த்தவீரியன் என்பானுல் கட்டுண்டான் என்னக்கற்கும்
வார்த்தைஉண்டு அதனைக்கேட்டுநாணுறும் மனத்தினேற்குப்
போர்த்தலைப் புறகிட்டு ஏற்ற புண்ணுடைத் தழும்புபோலாம்
நேர்த்தும் காணலுற்ற ஈசனர் இருக்கை நிற்க."

கார்த்த வீரியன் என்பவனுல் இவன் கட்டுண்டான் என்று சொல்லப்படுகிற வார்த்தை உண்டு. அதனைக் கேட்டிருக்கிற நான் (இவனைக் கொன்று விட்டதில்) நாணமடைகிறேன். எனக்கு (இவனைக் கொன்றது) நான் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிவாங்கிய தழும்பு போன்றதே.

இவனுடைய எதிர்ப்புக்கு இலக்காகக் கண்டு விட்ட சிவபிரானுடைய இருப்பிடமாகிய கைலாய மலையைப் பற்றிய சேதியும் ஒருபுறம் இருக்கிறது. நேர்த்தலும் — எதிர்த்தலும், காணலுற்ற — இலக்காகப் பார்த்துள்ள.

இச்செய்யுளின் கருத்து என்ன வென்றால்: கார்த்த வீரியனால் கட்டுண்டவன் இராவணன் என்பதைக் கேட்டிருக்கிறேன். அதை நினைக்கும்போது இவனை நான் கொன்று விட்டதற்கு வெட்கப்படுகிறேன். ஏனென்றால் என்னை விட மிகவும் குறைந்த அந்தஸ்துள்ள ஒரு சாதாரண கந்தர்வனை கார்த்தவீரியன் கட்டிப்போட்ட ஒருவனை நான் வெட்டித்தானே போட்டுவிட்டேன்! கார்த்தவீரியனைப்போல் நானும் இவனைக் கட்டிச் சிறையிலடைத்து புத்தி வரும்படிச் செய்து கார்த்தவீரியனிடம் இவன் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது போல் என்னிடத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படிச் செய்திருக்க வேண்டும். அதைச் செய்யாமல் கொன்றுதானே போட்டு விட்டேன்!

மேலும் இவன் கைலாய மலையிடத்தில் தன் வல்லமையைக் காட்டமுயன்று அதைப் பெயர்த்து விட்டான். அதை அறிந்த பரமசிவன் இவனை மலையின் கீழேயே கிடக்கும்படி மலையை அழுத்திவிட்டார். உடனே மன்னிப்புக் கோரி சாமகானம் செய்தான். அதனால் மகிழ்ச்சியடைந்த பரமசிவன் இவனை மன்னித்து விடுதலை செய்ததும் அல்லாமல் இவனுக்கு மூன்றரை கோடி ஆயுளும் வாளாயுதமும் கொடுத்து வரமளித்தார்.

கார்த்தவீரியன் செய்ததைப் போலவோ அல்லது சிவபிரான் செய்ததைப் போலவோ இவனை நான் வசப்படுத்தி இவனுக்கு மனமாறுதல் உண்டாக்கி நல்லறிவு வரும்படிச் செய்து அவனையும் வாழவைத்து நானும் மகிழும்படியாகச் செய்திருந்தால் அது எனக்குப் பெருமையுண்டாக்கியிருக்கும். அப்படிச் செய்யாமல் இவனைக் கொன்றுவிட்டதில் கொலைக் குற்றம்செய்துவிட்டவனைப் போல் நாணமடைகிறேன். மேலும் என்னுடைய இயல்பான கருவியாகிய கருணையைப் பிரயோகிக்காமல் கொலைக்கருவியைப் பிரயோகித்து விட்டதில் நான் செய்துள்ள காரியம் (போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்) போர் முனையில் முதுகிட்டோடிப் புண்பட்ட தழும்பு போன்றதே — என்பதே இச்செய்யுளின் கருத்து.

அதனால் நான் இவனைக் கொன்றிருக்கக் கூடாது பின் என்ன செய்திருக்க வேண்டு மென்றால்:

"மாண்டொழிந்து உலகில் நிற்கும் வயங்கிசை
 முயங்க மாட்டாது
ஊண்தொழில் உகந்து தெவ்வர் முறுவல்
 என்புகழை உண்ணப்
பூண்தொழில் உடைய மார்பா போர்ப்புறங்
 கொடுத்தார்ப் போன்ற
ஆண்தொழி லோரிற் பெற்ற வெற்றியும்
 அவத்தம என்றான்."

இந்தச் செய்யுளுக்கு உரைநூலிலுள்ள பொருள் என்ன வென்றால்:

(இ - ள்) ஆபரணங்களைப் பூணும் தொழிலைக் கொண்ட மார்பையுடையவனே! உண்ணுந் தொழிலையே விரும்பிப் பகைவரின் பரிகாசச் சிரிப்பு என் புகழை ஒழித்துவிடப் போரிற் புறங்கொடுத்தோரைப் போன்ற ஆண்மைத் தொழிலையுடைய இராவணன் பெற்ற வெற்றியும் உண்மையானதல்ல; ஆகையால் போரில் இராவணன் மாண்டு ஒழிந்ததனால் உலகில் நிலைத்து நிற்கும், விளங்குகின்ற கீர்த்தியும் (இனி என்னைச்) சேர மாட்டாது என்று சொன்னான்.

இது பொழிப்புரை; இதற்கு விளக்கமாக:—

அடுத்த செய்யுளில் வீடணன் மறுமொழி கூறுவதாக வருவதனால் இச்செய்யுளிலுள்ள விளி விபீடணனைக் குறிக்கும். சுத்த வீரனை வெல்லும் வெற்றியே புகழைத் தரும். இவ்விராவணன் புறங்கொடுத்தவனென்று இவனது முதுகின் தழும்பினால் ஏற்படுவது பற்றிச் சுத்த வீரனாகாத

இவனை வென்றதனால், புறங்கொடுத்தோரை வெல்வது போன்ற இவனை வென்ற உனக்கும் பழியுண்டாகுமே யன்றிப் புகழ் உண்டாகாதென்றவாறு.

இந்த உரையும் அதன் விளக்கமும் அந்தச் செய்யுளில் உள்ள பதங்களில் போக்குக்கும் நோக்குக்கும் முற்றிலும் மாறுபட்டதாக இருப்பதை அந்தச் செய்யுளைப் படிக்கும் போதே அறிந்து கொள்ளலாம். மேலும் மீண்டும் மீண்டும் இராவணன் போரிற் புறங்கொடுத்த தழும்பிருப்பதாகக் கூறியதையே கூறுவதாக இருக்கிறது.

இராவணன் போரில் யாருக்கும் புறங்கொடுத்தவன் அன்று என்பதை ஐயந்திரிபுக்கு இடமில்லாதபடி விளக்கப் பட்டு விட்டது. வேறு பல குற்றங்கள் அவனிடத்தில் இருந்தாலும் 'போரிடை மீண்டு ஒருவருக்கும் புறங் கொடாமைதான்' அவனுடைய தனிச்சிறப்பு.

அதனால், இராமனுடைய வாய்மொழியாக உள்ள இந்த மூன்று செய்யுட்களில் முதல் செய்யுளில் 'பின்றியான் முதுகிற்பட்ட பிழம்புள தழும்பினம்மா!' என்ற சொற் றொடரும், இரண்டாவது செய்யுளில் உள்ள 'போர்த்தலை புறகிட்டேற்ற புண்ணிடைத் தழும்பு போலாம்' என்றதும், இந்தச் செய்யுளில் உள்ள 'போர்ப் புறங் கொடுத்தாற் போன்ற ஆண்டொழி லோரிற் பெற்ற வெற்றி' என்றதும் இராவணனைப் பற்றியவாக இருக்க முடியாது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆகவே, இந்தச் செய்யுளில் கம்பன் கருதிய கருத்தைப் பார்ப்போம்.

மாண்டொழிந்து உலகில் நிற்கும் வயங்கிசை
முயங்க மாட்டாது
ஊண்தொழில் உகந்து தெவ்வர் முறுவல்
என்புகழை உண்ணப்

பூண்தொழில் உடைய மார்ப போர்ப்புறங்
கொடுத்தார்ப் போன்ற
ஆண்தொழி லோரிற் பெற்ற வெற்றியும்
அவத்தம் என்ருன்.

மாண்டு ஒழிந்து=(இவனைக் கொல்லாமல் நான் பட்டினி கிடந்து) உயிரைத் துறந்து, உலகில் நிற்கும்=(அதனால்) உலகத்தில் நிலைத்திருக்கும்படியான, மயங்கு இசை முயங்க மாட்டாது=மிகப் பிரகாசமாக விளங்கத்தக்க கீர்த்தியை அடையமுடியாமல், ஊண் தொழில் உகந்து=சாப்பிட்டுக் கொண்டு உயிரோடிருக்க ஆசைகொண்டு, தெவ்வர்முறுவல் என் புகழை உண்ண=பகைவர்களுடைய ஏளனச் சிரிப்பு என் புகழை அழிக்கும்படி, பூண் தொழில் உடைய மார்பா=வேலைப்பாடுகள் உள்ள ஆபரணங்களை அணிந்த மார்புடைய விபீடணு! போர்ப் புறங்கொடுத் தார்ப்போன்ற=போரில் முதுகிட்டது போன்ற, ஆண் டொழிலோரிற் பெற்ற வெற்றியும் அவத்தம் என்ருன்= தோளாற்றலால் இவனைக் கொலைபுரிந்து நான் அடைந்த இந்த வெற்றி உண்மையான வெற்றியல்ல—என்ருன்.

இதன் கருத்து என்னவென்ருல்; விபீடணு! நான் இவனைக் கொலை புரிந்துவிட்டதற்கு வருந்துகின்றேன். இவனைக் கொல்லாமல் கார்த்தவீரியனைப் போல் இவனைச் சிறைப்படுத்தி இவனுக்கு மனமாறுதல் உண்டாகும்படிச் செய்திருக்க வேண்டும். இவனுக்கு மனமாற்றம் உண்டாவதற்காக நான் உண்ணுவிரதம் மேற்கொண்டு அன்பு வழியில் முயன்றிருக்க வேண்டும். அந்த உண்ணுவிரதத்தில் நான் மாண்டொழிந்தாலும், 'இராமன், இராவணனைக் கொலை செய்ய மறுத்து உயிரைத் துறந்தான்' என்ற மிகப் பிரகாசமான கீர்த்தி உலகத்தில் நிலைத்திருக்கும். அந்தக் கீர்த்தியை அடையமாட்டாமல் இவனைக் கொன்றுவிட்டு, நான் உயிர்வாழ உண்டுகொண்டிருக்க ஆசைப்பட்டு, என்

னுடைய பகைவர்களெல்லாம். 'இந்த இராமனைப் பற்றி வெகு பிரமாதமாகப் பேசினார்களே! தசரதனுடைய யாகத்தினால் பரம்பொருளே அவதாரமாக வந்தவன் என்றும், வாலியைக் கொன்றவன் என்றும் பலவாறு புகழ்ந்தார்களே! வாலி, தன் வாலால் சுருட்டிக்கட்டப்பட்டவனும் கார்த்தவீரியன் கட்டிப்போட்டுச் சிறையில் வைத்திருந்தவனுமான இராவணனைச் சிறைப்படுத்த முடியாமல் கொன்றுதானே போட்டான்' என்றெல்லாம் பேசி எள்ளி நகையாடி என் பெருமையை அழிக்கும்படிப் போரில் முதுகிட்டதுபோல் நாணமடைகிறேன். அதனால் இந்தக் கொலை வழியில் நான் பெற்ற வெற்றி பொய்யான வெற்றி. (கொலைபுரியாமல் அன்பு வழியில் அடையும் வெற்றிதான் உண்மையான வெற்றியாகும்) என்று சொன்னான்.

'மாண்டொழிந்து' என்பதற்கு 'உண்ணாவிரதம் மேற்கொண்டு உயிர் துறத்தல்' என்ற பொருள் எப்படி வரும் என்ற கேள்வி எழலாம். மாண்டொழிவது என்றால். உணர்ச்சி வசப்பட்டுக் கோபதாபத்தாலோ வெறுப்பினாலோ தற்கொலை செய்துகொள்வது அல்ல; தானாக இச்சைப்பட்டு உயிரைவிடுவது தானாக இச்சைப்பட்டு ஒரு நியாயத்தை நிலைநிறுத்த உயிர் துறப்பது உணவை மறுத்து மாண்டுபோவதே. இந்த இடத்தில் இதுதான் பொருள் என்பது இந்தச் செய்யுளில் 'ஊண்தொழில் உகந்து' என்ற பதங்களால் உறுதிப்படுகிறது. 'மாண்டு ஒழியாமல் உண்டு கொண்டு உயிர்வாழ்ந்திருக்க ஆசைப்பட்டு' பகைவருடைய ஏளனச் சிரிப்புக்கு ஆளாகிப் புகழை இழக்கும்படியாக இருப்பதால் இவனைக் கொன்று அடைந்த வெற்றி நாணத்தக்கது-என்பதே கருத்து.

மேலும் கொலைபுரிய வேண்டிய வீரத்தொழிலான (ஆண்டொழில்) போர்புரிந்து அடையக்கூடிய வெற்றிகள் உண்மையான வெற்றிகள் அல்ல என்னும் நிரந்தரமான உண்மையும் இங்குக் குறிக்கப்படுகிறது.

இனி இராமனுடைய வாய்மொழியாக உள்ள மூன்று செய்யுட்களையும் சேர்ந்தாற்போல் படித்துப் பார்ப்போம்.

(1) வென்றியா னுலகமூன்றும் மெய்மையான் மேவினாலும்
பொன்றினன் என்று தோளைப் பொருது வற நோக்கும்பொற்பும்
குன்றி ஆசுற்றது அன்றே இவனெதிர் குறித்த போரில்
பின்றியான் முதுகிற்பட்ட பிழம்புள தழும்பின் அம்மா!

(2) கார்த்தவீரியன் என்பானுல் க்ட்டுண்டான் என்னக்கற்றும்
வார்த்தை உண்டு அதனைக்கேட்டுநாணுறும்மனத்தினேற்குப்
போர்த்தலைப் புறகிட்டுஏற்றப் புண்ணுடைதழும்பு போலாம்
நேர்த்ததும் காணலுற்ற ஈசனுர் இருக்கை நிற்க.

(3) மாண்டுஒழிந்து உலகிற்நிறகும் வயங்கு இசை
முயங்க மாட்டாது
ஊண்தொழில் உகந்து தெவ்வர் முறுவல்
என்புகழை உண்ண
பூண்தொழில் உடைய மார்பா போர்ப்புறங்
கொடுத்தார்ப் போன்ற
ஆண்தொழி லோரிற் பெற்ற வெற்றியும்
அவத்தம் என்றான்.

(1) இராவணனை வென்றுவிட்டதால் இவன் ஆண்ட மூன்று உலகங்களையும் நாம் அடைந்துவிட்டோம் என்பது உண்மையானாலும், இவனைக் கொன்றுவிட்டதாகிய அசாதாரண செயலைச் சாதித்துவிட்டோம் என்று என்னுடைய தோளாற்றலைப் பற்றிப் பெருமைபட்டுக் கொள்ளக்கூடிய சிறப்பு குலைந்துவிட்டது மல்லாமல் இவனைக் கொன்றது குற்றமாகிவிட்டது. அதனால் இவனை எதிர்த்துச் செய்த போரில், நான் புறமுதுகிட்டு முதுகில் அடிபட்டுப் பெரிய தழும்புண்டாக்கிக் கொண்டதைப்போல் இருக்கிறது.

(2) இவன் கார்த்தவீரியன் என்பவனால் கட்டுண்டவன் என்று சொல்லப்படுகிற செய்தியைக் கேட்டிருக்

கிறேன். அதனுல் கார்த்தவீரியன் என்ற ஒரு கந்தர்வனுல் கட்டிப் போடப்பட்ட இவனை நானும் கட்டிப்போட்டு புத்தி வரும்படிச் செய்யாமல், கொன்றுவிட்டதில் நான் அந்தக் கார்த்தவீரியனைவிடக் குறைந்தவனுகிவிட்டேனே என்று வெட்கப்படுகிறேன். மேலும் இவன் கைலாய மலையைப் பெயர்த்தபோது சிவபிரான் இவனைக் கொன்றுவிடாமல் இவனை மலையின் கீழ் அழுத்தி இவனுக்கு நல்லறிவு வரச் செய்தார். பக்தியோடு சாமகானம் பாடினுன். சிவபிரான் மகிழ்ந்து மூன்றரைகோடி ஆயுளும் வாளும் கொடுத்தார். இவையெல்லாம் நினைத்து. இவனை நான் கொன்றது குற்றம் என்றும் அக்குற்றம் போரில் புறமுதகு காட்டி அடி வாங்கிய தழும்பு போன்றதே என்றும் வெட்கப்படுகிறேன்.

(3) நான் இவனைக் கொல்லாமல், கார்த்தவீரியனும் சிவபெருமானும் செய்ததுபோல் சிறைபடுத்தி இவனுக்கு மனமாற்றம் உண்டாகும்படிச் செய்திருக்க வேண்டும். அப்படி இவனுக்கு மனமாற்றம் உண்டாக்க நான் உண்ணு விரதம் மேற்கொண்டுப் பிரார்த்தனை செய்திருக்க வேண்டும். அந்த உண்ணுவிரதத்தில் நான் மாண்டொழிந்தாலும் 'இராமன் இராவணனைக் கொலை புரிய மறுத்துப் பட்டினி கிடந்து உயிரைத் துறந்தான்' என்ற பெரும் புகழ் நிலைக்கும். அந்தப் புகழை அடையமாட்டாமல், உணவைத் தின்றுகொண்டு நான் உயிரோடிருக்க வேண்டுமென்ற ஆசையினுல் இவனைக் கொன்றுவிட்டேன். இதனுல் என்னிடத்தில் பகைமை பாராட்டக்கூடியவர்களெல்லாம் 'இந்த இராமன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்ததால் பரம்பொருளே அவதாரமாக வந்தவனென்றும் சர்வ வல்லமையுள்ளவனென்றும் சொல்லிக்கொண்டார்களே! கார்த்தவீரியன் எட்டிப்பிடித்துக் கட்டிப் போட்டுச் சிறை வைத்திருந்த இராவணனைப் பிடித்துச் சிறையிலிட்டு அவனுக்குப் புத்தி வரும்படிச் செய்யமுடியாமல் கொலைதானே செய்துவிட்டான்' என்றெல்லாம் சொல்லி எள்ளி நகையாடி என்

புகழை அழித்து விடுவார்கள். அதனுல் ஆபரணங்கள் பிரகாசிக்கும் மார்பையுடைய விபீடணு! போரில் புறங்கொடுத்தது போன்றது இந்த (கொலை பாதகமுள்ள) போர்வீரத் தொழிலால் நான் அடைந்துள்ள) வெற்றி பொய்யான வெற்றி; உண்மையான வெற்றியல்ல.

இதுதான் இராமன் வாய்மொழியாக உள்ள இந்த மூன்று செய்யுட்களின் கருத்தாக இருக்கமுடியும். ஏனென்ருல் இந்த மூன்று செய்யுட்களிலும் இராவணன் போரிற் புறங்கொடுத்து முதுகில் அம்புபட்டப் புண்ணின் தழும்பு இருப்பதாக உரை செய்யப்பட்டிருப்பது முற்றிலும் தவருனது. அந்தத் தழும்பையும், இறந்து கிடந்த இராவணனுடைய உடலைப் பார்த்த பிறகுதான் இராமன் கண்டான் என்பது போலவும் அதை முன்னுலேயே அறிந்திருந்தால் இராமன் இராவணனேடு போர் புரிவதே தன் பெருமைக்குக் குறைவான காரியம் என்று கருதியிருப்பான் போலவும் தோன்றும்படி உரை அமைந்திருக்கிறது.

இராமன், போர் தொடங்குவதற்கு முன்னுலேயே இராவணனுடைய சரித்திரத்தையும் அவனுடைய ஆற்றலையும் அவன் யாராலும் போரில் வெல்லப்படாதவன் என்பதையும் நன்ருக அறிந்தவன்.

இராமன், சீதையை இராவணன் அபகரித்துக்கொண்டு போய்விட்டான் என்பதை அறிந்தது முதல் இலங்கையின் மீது படையெடுத்து வருகிற வரைக்கும் இராவணனைப் பற்றிப் பலர் சொல்லக் கேட்டிருக்கிருன். அப்படிக் கேள்விப்பட்டவை அரைகுறையாக இருந்தாலும் வீபீடணன் இராமனிடத்தில் அடைக்கலம் புகுந்தபின் இராமனே,

"வினைவலியும் தன்வலியும் மாற்ருன்வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்."

செய்யவேண்டிய காரியத்தின் வலிமையையும், தன்னுடைய வல்லமையும் எதிரியினுடைய வல்லமையையும் தனக்கும்

எதிரிக்கும் துணையாக வரக்கூடியவர்களுடைய வல்லமையையும் அளந்து அறிந்து கொண்டு காரியத்தில் இறங்க வேண்டும்.

என்றபடி இலங்கையின் படை பலத்தையும் அரண்களின் பலத்தையும் விவரமாகச் சொல்லும்படி விபீடணனிடம் கேட்கிறான். விபீடணன், இலங்கையைப் பற்றியும் அரண்களைப் பற்றியும் சேனையின் எண்ணிக்கையைப் பற்றியும் சேனைத் தலைவர்களைப் பற்றியும் இந்திரனை வென்ற இந்திரசித்து முதலான இராவணனுடைய புத்திரர்களைப் பற்றியும் வெகு விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லிவிட்டு இராவணனுடைய வல்லமைகளையும் சொல்லுகிறான்.

அதில், இராவணன் சிவபிரான் முதலிய மும்மூர்த்திகளிடம் வரம் பெற்றதையும், கைலாய மலையை வேரோடு பறித்ததையும், திக்கு கஜங்களை வென்றதையும், முப்பத்து முக்கோடி முப்பத்து மூவரெனப்பட்ட தேவர்கள் அனைவரையும் வென்று, அவர்கள் இவனுடைய பெயரைக் கேட்டாலும் நடுங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், அவன் காலகேயரை வென்றதையும், குபேரன் இவனுக்குத் தோற்றுப்போய் அவனுடைய நிதிகளையும் விட்டுவிட்டு ஓடிப்போய் இவனுக்கு அஞ்சிக்கொண்டே யிருப்பதையும், எமனை இவனிடம் தோற்றுப்போய்ப் புறங்கொடுத்தோடி முதுகில் புண்பட்டு இராவணன் தன்னைக் கொன்று விடுவானோ என்று நடுங்கிக்கொண்டிருக்கிறான் என்பதையும், தன்னுடைய இலங்கையில் எப்போதும் சந்திரனை ஒளி கொடுத்துவர வேண்டுமென்றும் சூரியன் அங்கே தலைகாட்டக் கூடாதென்றும் ஆணையிட்டு அதன்படியே சூரியன் இலங்கையை எட்டிக்கூடப் பாராமல் இருந்து வருவதையும், வருணபகவான் இவனுக்கு அஞ்சிக் கடலில் ஒளிந்துகொண்டதையும் விரிவாகச் சொல்லி விட்டுக் கடைசியாக,

"என்றுலப்புறச் சொல்லுகேன் இராவணன் என்னும்
குன்றுலப்பினும் உலப்பிலாத் தோளினுன் கொற்றம்
இன்று உலப்பினும் நாளையே உலப்பினும் சிலநாள்
சென்று உலப்பினும் நினக்கன்றிப் பிறர்க்கு என்றும் தீரான்"

இராவணனை மலையே தாக்கினாலும் மலைக்கு அழிவுண்டாகுமேயன்றி அவனுடைய தோள்களுக்கு ஒரு கெடுதியும் நேராது. அப்படிப்பட்ட அவனுடைய வெற்றி வீரம் என்றைக்கு அழியுமோ சொல்ல முடியாது. ஆனால் அவன் இன்றைக்கே அழிவதானாலும் நாளைக்கு அழிவதானாலும் அல்லது இன்னும் சில நாட்கள் சென்றபின் அழிவதானாலும் அவனை உன்னைத் தவிர வேறு எவராலும் எக்காலத்திலும் அழிக்க முடியாது—என்பது.

இது, போர் தொடங்குமுன்னால் விபீடணன் இராமனுக்குச் சொன்னது. இப்படியெல்லாம் இராவணனைப் பற்றிக் கேட்டறிந்திருந்த இராமன், இராவணனைக் கொன்ற பின் அவனுடைய உடலைப்பார்த்தபோதுதான் அவனுடைய முதுகில் போரில் புறங்கொடுத்து முதுகில் அடிவாங்கிய தழும்பு இருப்பதைக் கண்டான் என்று கூறுவது ஒரு சிறிதும் பொருந்தாது.

மேலும் உரை நூலில் சொல்லப்பட்டிருக்கிறபடி இராமன் இராவணனுடைய முதுகில் தழும்பு இருப்பதைக் கண்டது உண்மையானால், இரண்டாவது செய்யுளில் :

'போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்' — என்றும்

மூன்றாவது செய்யுளில் .

'போர்ப் புறங் கொடுத்தோர்ப் போன்ற' என்றும் இருக்கின்ற சொற்றொடர்களில் 'போலாம்' என்றும் 'போன்ற' என்றும் உள்ள பதங்கள் அப்படிப் பொருள்

5

கொள்ள இடந்தரவில்லையே! அந்தப் பொருளை மறுக்கின்றன.

'போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்' என்பதற்குப் 'போரில் புறமுதுகு காட்டி வாங்கிக் கொண்ட புண்ணின் தழும்பு போல ஆகும்' என்பது தானே பொருள்? 'போர்ப்புறங் கொடுத்தார்ப் போன்ற, என்பதற்கும் 'போரில் புறங் கொடுத்தது போன்ற'என்பது மட்டுந்தானே பொருள்?

'போலாம்' என்ற சொல்லுக்கு உரை நூலில் பொருளே கொள்ளப்படவில்லை.

அடுத்த செய்யுளில் உள்ள 'போன்ற' என்பதற்கு 'போரிற் புறங்கொடுத்தோரைப் போன்ற ஆண்மைத் தொழிலையுடைய இவ்விராவணனுர் பெற்ற வெற்றியும் உண்மையானதல்ல' என்று கூட்டப்பட்டிருக்கிறது. இதிலும் இராவணன் போரிற் புறங் கொடுத்தோரைப் 'போன்றவன்' என்றுதான் இருக்கிறது. அப்படியானால் 'கார்த்தவீரியனென்பானல் கட்டுண்டானென்ன.........' என்ற செய்யுளில் உள்ள 'போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்' என்பதற்கு 'எனக்கு இவ்விராவணன் போரிலே முதுகு காட்டியதனுல் தோன்றிய புண்ணினுடைய தழும்பும் நேராகக் காணப்பட்டது' என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது.

'போரிற் புறங்கொடுத்தோரைப் போன்ற இராவணன்' என்பதும், 'இராவணன் முதுகில் புறங்கொடுத்தத் தழும்பு இருப்பதை நான் நேராகக் கண்டேன்' என்பதும் ஆகிய இரண்டும் ஒன்ருகுமா? ஒன்ருக மாட்டா.

ஆதலால், 'பின்றியான் முதுகிற்பட்ட புழம்புள தழும்பின் அம்மா!' என்றதும், 'போர்த்தலைப் புறகிட்டேற்ற புண்ணுடைத் தழும்பு போலாம்' என்றதும், 'போர்ப் புறங் கொடுத்தோர்ப் போன்ற' என்றதும்

இராவணனைப் பற்றியவை அல்லவென்பதில் ஐயத்துக்கு இடமேயில்லை.

எனவே இராமன் இராவணனைக் கொன்றுவிட்டதற்கு வருந்தித் தன்னைத்தானே நிந்தித்துக் கொள்ளுகிருன். போர்வீரன் என்ற நிலையை விட்டு இராமன் சான்ருேன் என்ற நிலையில் நின்று.

"நன்ருகும் ஆக்கம் பெரிதெனினும் சான்ருேர்க்குக்
கொன்ருகும் ஆக்கம் கடை"

நன்மை தரக்கூடிய இலாபம் பெரிதாகக் கிடைப்பதானுலும், கொலை புரிந்து அதனுல் வரக்கூடிய இலாபத்தைச் சான்ருேர்கள் இழிவாகத்தான் கருதுவார்கள்.

என்றபடி கொல்லாமையின் உயர்வை எண்ணி வருந்துகிருன். இராவணனை வென்று விட்டது உண்மையானுலும் கொன்று விட்டது குற்றமென்றும், அவனைக் கொல்லாமல் கார்த்தவீரியன் செய்ததுபோலவும் சிவபிரான் செய்தது போலவும் அவனைச் சிறைப்படுத்தி புத்தி வரும்படிச் செய்ய முடியவில்லையே என்றும், கார்த்தவீரியன் கட்டிப்போட்ட இராவணனை இராமன் கட்டிப் போடச் சக்தியற்றவனுய் வெட்டித்தானே போட்டான்' என்று தன் பகைவர்களெல்லாம் ஏளனம் செய்து சிரிப்பார்களே என்றும் நாணமடைகிருன்.

இராவணனைச் சிறைப்படுத்தி அவனுக்கு நல்லறிவு வருவதற்காகத் தான் உண்ணுவிரதம் மேற்கொண்டு உயிரைத் துறந்திருந்தாலும் அதனுல் 'கொலை செய்ய மறுத்து இராமன் தன்னுயிரைத் துறந்தான்' என்ற பெரும் புகழ் உலகத்தில் நிலைத்திருக்குமே என்றும் சொல்லுகிருன். கடைசியாகக் கொலை வழியாகிய போர் புரிந்து அதனுல் அடையக்கூடிய வெற்றி உண்மையான வெற்றியாகமாட்டாது என்ற ஒரு நிரந்தரமான உண்மையை உலகமறியச் சொல்லுகின்ருன்.

'ஒன்ருக நல்லது கொல்லாமை' என்ற திருவள்ளுவரின் பொது மறையிலுள்ள கருத்தை இராமாயணத்தில் புகுத்த வேறு இடமில்லாமையால் அதை இராமாவதாரத்தின் முக்கிய காரியமான இராவண வதம் முடிந்தபின், இராவணனைக் கொன்ற இராமன் வாக்காகவே கொல்லாமையின் உயர்வைச் சொல்வதே கம்பநாட்டாழ்வாரின் கற்பனைச் சிறப்பு.

இதில் எதிரிக்கு இம்சை செய்யாமல் அவனுக்கு மன மாற்றம் உண்டாக்க உண்ணுவிரதம் இருந்து உயிரைப் பணயம் வைப்பது என்ற கொள்கை அமைந்திருப்பது ஒரு அற்புதம்.

அந்தக் கொள்கையை வாழ்க்கையில் நடத்திக் காட்டிய ஒரே ஒரு சரித்திர புருஷன் காந்தியடிகளே. அதனல் கம்ப ராமாயணத்தில் காந்திய தத்துவத்தைக் காண்கிருேம்.

அதுவே 'காந்தியடிகளும் கம்பநாட்டாழ்வாரும்' என்ற இக்கட்டுரையின் பெயருக்குக் காரணம்.

எதிரிக்குத் துன்பம் செய்யக் கூடாதென்று உயிரைப் பணயம் வைத்து உண்ணுவிரதம் மேற்கொள்வது என்ற கொள்கை மனிதருக்குள் நிலைப்பது அசாத்தியம். என்ருலும் கொல்லாமையின் சிறப்பையும் அவசியத்தையும் வற்புறுத்தி வாழ்ந்து காட்டிய மகான்களின் போதனையினுல்தான் உலக சமுதாயம் இந்த மட்டிலாவது சமாதானமாக நடந்து வருகின்றது.

★